விலை ரூபா: 20.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 28 வியாழக்கிழமை (13.09.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 269

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

## காணாமல்போனோரைக் கண்டுபிடிக்க

# வவுனியாவில் நேற்று பிரார்த்தனைப் போர்





*(வவுனியா),* தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் தடுப்பில் உள்ளவர்களின் விடுதலையை வலியுறுத்தியும், காணாமல் போயுள்ளவர்களை மீட்டுத் தரும்படி வேண்டியும், வவுனியா காளி கோவிலில் தேங்காய் உடைத்து நடத்தப்பட்ட பிரார்த்தனையின் போது உறவினர்கள் பலரும் கண்ணீர் விட்டு, கதறி அழுது வேண்டுதல் நடத்தினர். *(19ஆம் பக்கம் பார்க்க)*

# அரசாங்கத்துடன் பேச விருப்பம் கூட்டமைப்புடனும் பேசுவோம்!

## -அமைச்சர் ஹக்கீம்



கிழக்கு மாகாண சபை ஆட்சி தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்களில் பெரும்பாலானோர் விரும்புவதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு யாருக்கு என்பதை தீர்மானிக்கும் கலந்துரையாடலில் முஸ்லிம் முதலமைச்சர் பதவியும் கரிசனைக்குரிய முக்கிய விடயங்களில் ஒன்றாகும் என அக்கட்சி தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண சபையில் 14 ஆசனங்களைச் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் 11 ஆசனங்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆட்சியை அமைப்பதற்காக 7 ஆசனங்களைக் கொண்ட முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவை நாடியுள்ளன. இந்நிலையில், யாருக்கு ஆதரவு அளிப்பது என்பதை தீர்மானிப்பதற்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சிரேஷ்ட தலைவர்களும் கிழக்கு மாகாண சபைக்குத் தெரிவான கட்சியின் உறுப்பினர்களும் கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினர். *(20ஆம் பக்கம் பார்க்க)*

## தீர்மானம் எடுக்க ஹக்கீமுக்கு அதிகாரம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபை ஆட்சி அமைப்பது தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமிற்கு வழங்கப்பட்டுள்ளது என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர் ஹக்கீம் தலைமையில் நேற்று புதன்கிழமை காலை விசேட கூட்டமொன்று கொழும்பில் இடம்பெற்றது. இக்கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கிழக்கு மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினர்களும் *(19ஆம் பக்கம் பார்க்க)*

## சீன உயர்மட்டக்குழு இலங்கை வருகிறது

(கொழும்பு)

சீனாவின் தேசிய மக்கள் காங்கிரஸின் நிலையியற் குழுவின் தலைவரான வூ பாங்குவோ, இவ்வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். சீன அரசியல் உயர்மட்ட வரிசையில் அவர், மூன்றாவது நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவருடன் 100 பேர் கொண்ட தூதுக் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்து அரசாங்க உயர்மட்டத்தினரை சந்திக்கவுள்ளது.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில், *(19ஆம் பக்கம் பார்க்க)*

# கூட்டமைப்பு உறுப்பினர்களை விலைபேசும் அரசாங்கத் தரப்பு

## சுமந்திரன் எம்.பி முறையீடு

(கொழும்பு)

மாகாண சபை ஆட்சியை அமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்குவதற்கு பணம் தருவதாகக் கூறிக்கொண்டு கிழக்கு மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்ட நான்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களை சிலர் மிரட்டல் பாணியில் அணுகியதாக தேர்தல்கள் ஆணையாளரிடம் முறையிடப்பட்டுள்ளது.

37 அங்கத்தவர்களைக் கொண்ட கிழக்கு மாகாண சபையில் எந்தவொரு தனிக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையை பெறாத நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பானது, 7 அங்கத்தவர்களைக் கொண்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைப் பெற முயல்கின்றது.

அதேவேளை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவைப் பெற்று மாகாண சபையை கைப்பற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்புகின்றது.

இந்நிலையில், தனது கட்சி உறுப்பினர்களான நான்கு பேரிடமும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் சேரும்படி கேட்கப்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறினார்.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.ராஜேஸ்வரன், *(19ஆம் பக்கம் பார்க்க)*

## யாழில் பட்டதாரிப் பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்ய நேர்முகத்தேர்வு

(யாழ்ப்பாணம்)

2010, 2011-ம் ஆண்டுகளில் பட்டம் பெற்றவர்களை பட்டதாரிப் பயிலுநர் நியமனத்துக்கு உள்வாங்குவதற்கான நேர்முகத்தேர்வு வரும் 15, 16ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

பட்டதாரி பயிலுநர்களுக்கான ஆட்சேர்ப்பு தொடர்பில், அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு செயலரின் அறிவுறுத்தலுக்கிணங்க, 2010 மற்றும் 2011-ம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பை பூர்த்திசெய்து வெளியேறி ஏற்கெனவே மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு தோற்றாதவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 15-ம் திகதி மற்றும் 16ஆம் திகதிகளில் காலை 9.00 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதன்பொருட்டு பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி, கோப்பாய், சாவகச்சேரி, உடுவில், தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவை சேர்ந்த பட்டதாரிகள் 15ஆம் திகதியன்றும்,

யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, காரைநகர், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை வேலணை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த பட்டதாரிகள் 16-ம் திகதி அன்றும் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதி மற்றும் நிழல்படப் பிரதியுடன் மாவட்டச் செயலகத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப் (19ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல்போனோர் தொடர்பில் யாழில் விசாரணைகள் ஆரம்பம்!

### மனித உரிமை ஆணைக்குழு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த 2006-ம் ஆண்டு காலப்பகுதியில் காணாமல்போனோர்கள் தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் 17-ம் திகதி தொடக்கம் 21-ம் திகதி வரை இடம் பெறவுள்ளது என இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

அவரது அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் காணாமல்போனோர் தொடர்பான விசாரணைகளை இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

இதன்படி கடந்த 2006-ம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் காணாமல் போனவர்கள் *(19ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# பொதுநலவாய நாடுகளின் எம்.பிக்கள் இன்று யாழ் வருகை

(யாழ்ப்பாணம்)

பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு வொன்று இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளது.

யாழ். வரும் அவர்கள் இன்று காலை 8.30 மணி க்கு யாழ். அரச அதிபரைச் சந்தித்து யாழ்ப்பாண அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆராயவுள்ளனர். அதன்பின் யாழ். நூலகத்துக்குச் சென்று பார்வையிட்டு பின்னர் கிளி நொச்சிக்கான தமது விஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர். (எ-6)


செல்லா சினிமா - யாழ்ப்பாணம்

இலங்கை இந்திய ஒரேதின வெளியீடு

ஜீவா, பூஜாஹெக்டே, நரேன் நடித்த



10.30, 2.30, 6.30, 9.30 D.T.S

(C-941)


# கலைஞர் - பிரணாப் சந்திப்பின் பின் ஈழத்தமிழர்களின் அழிவு தொடங்கியதாம்

(சென்னை)

சி.ஐ.டி காலனி வீட்டில் தமிழக முதல்வர் கருணாநிதியை பிராணாப் முகர்ஜி தலைமையில் சந்தித்த நிகழ்வுக்குப்பிறகு அவர் மௌனமானார்.

அதன்பிறகுதான் ஈழ அழிவு தொடங்கியது. தமிழக சஞ்சிகையானயூனியன்விகடன் இதழில் கழுகார் பதில்கள் பகுதியில் கேட்கப்பட்ட வினாவுக்கு இவ்வாறு பதிலளிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்ட கேள்வி பதில் வருமாறு, ஈழப்போரின் போது தமிழ் நாட்டின் முதல்வராக இருந்தவர் என்ன செய்திருக்க வேண்டும்? என்கிறீர்கள்.

மத்திய காங்கிரஸ் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தன்னுடைய ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுத்திருக்க வேண்டும். காங்கிரஸின் அரசின் ஆதரவில்லாமல் இவ்வளவு தைரியமாக இலங்கை செயல்பட முடியாது.

இலங்கைப் போரை உடனே நிறுத்தியாக வேண்டும் என்று இந்திய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியும் பகிரங்கமாக எச்சரித்தும் ஐ.நாவின் கவனத்தை ஈர்க்கும் முயற்சியை செய்துமிருந்தால் இலங்கை தன்னுடைய நடவடிக்கைகளைத்தள்ளிப் போட்டிருக்கும்.

அமெரிக்க அதிபர் ஒபாமாவிடம் புலம் பெயர் தமிழீழ மக்கள் பிரதிநிதிகள் சென்று கேட்டபோது, நீங்கள் இந்தியாவை நிர்ப்பந்தம் செய்ய வையுங்கள் என்றுதான் சொன்னார்கள். அப்போது அத்தகைய நிர்ப்பந்தத்தை தமிழ் நாட்டு முதலமைச்சர் செய்திருந்தால் போதும்.

சி.ஐ.டி. காலனி வீட்டில் கருணாநிதியை பிரணாப் முகர்ஜி தனிமையில் சந்தித்த நிகழ்வுக்குப் பிறகு அவர் மௌனமானார். அதன் பிறகுதான் ஈழ அழிவு தொடங்கியது. மற்றப்படி போராட்டம், பேரணி, மனிதச்சங்கிலி எல்லாம் எதற்கு? அது அதிகாரம் இல்லாதவர்கள் செய்திருக்க வேண்டியது என்றுள்ளது. (எ-11)

# வலம்புரியின் செய்திக்கு மறுப்புத் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)


வலம்புரியில் கடந்த 10ஆம் திகதி 8ஆம் பக்கம் 'இளைஞர்களின் குத்தாட்டம் பார்வையாளர்கள் விசனம்' என்னும் தலைப்பில் வெளியான செய்திக்கு ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஆலய அருட்பணிச்சபை மறுப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஆலய பங்குத்தந்தையும் அருட்பணிச் சபையினரும், இளைஞர் மன்றத்தினரும் கூட்டாக விடுத்த அறிக்கையில் வலம்புரி நாளிதழில் வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது எனவும் அப்படியான சம்பவம் எதுவும் நடைபெறவில்லையெனவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஆலயத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகள், கலை நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## இவரைக் காணவில்லை

### சின்னத்துரை வேலுப்பிள்ளை



வேம்போடுகேணி - பளையை நிரந்தர முகவரியாகவும் - கொற்றாவத்தை, வல்வெட்டித்துறையை (உதயதாரகை கல்வி நிலையம் அருகாமை) தற்காலிக முகவரியாகவும் கொண்ட சின்னத்துரை வேலுப்பிள்ளை என்பவரை 11.09.2012 காலை 11.00 மணியிலிருந்து காணவில்லை. இவர் ஒருகண் பார்வை குறைந்தவர். வீட்டிலிருந்து இவர் புறப்படும் போது வெள்ளைக்கோடு போட்ட சேட்டும் நீல நிற சாரமும் அணிந்திருந்தார். இவரைக் கண்டவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

ரூபன் : 0776218132, சிறி : 0778696103

நாதன் : 0778380238

(C-1035)

# தொழிலுக்கு சென்ற மீனவரை காணவில்லை

(கரவெட்டி)

வடமராட்சி கடற்பரப்பில் நேற்றைய தினம் படகில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவரை காணவில்லை என முறையிடப்பட்டுள்ளது. இவரைத் தேடும் பணியில் மீனவர்களும் கடற் படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

பொலிகண்டி மீள்குடியேற்றப் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான தேவசகாயம் துரைராசா (வயது 40) என்பவரே காணாமல் போயுள்ளார். வடமராட்சி பொலிகண்டி கடற் பரப்பில் நேற்று முன்தினம் 11ஆம் திகதி இரு மீனவர்கள் தொழில் நிமித்தம் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றுள்ளனர்.

அங்கு அதிகளவான மீன்கள் பிடிபட்டுள்ளன. இதனால் நிறை அதிகளவாக காணப்பட்டதனால் அவருடன் சென்ற மற்றைய மீனவர் வேறு படகில் கரை திரும்பியுள்ளார். எனினும் நேற்று அதிகாலை வரை மற்றைய மீனவர் கரை திரும்பாததால் கடற்படையினரும் அப்பகுதி மீனவர்களுமாக 20 படகுகளில் நேற்றைய தினம் தேடுதலில் ஈடுபட்டனர். (எ-24)


YAALH ENGLISH ACADEMY

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்

புதிய வகுப்புகள் : சனி 15.09.2012

- உத்தியோகத்தர்க்கு
- உயர் கல்வி மாணவர்க்கு
- A/L படித்தவர்க்கு
- பிறநாடு செல்பவர்க்கு
- தாய்மார்க்கு
- பாடசாலை மாணவர்க்கு

விபரங்கள் + பெயர் பதிவு : 077 3212 711 மூலம்

வகுப்பிட அனுசரணை

புதிய உயர் கல்லூரி


ஆரியகுளம் சந்தி : யாழ்நகர்

(392)


# மரண அறிவித்தல்

# வாமதேவன் சவுந்தராஜன்

## (சந்திரன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)



**மண்ணில் : 09.05.1959**

**விண்ணில் : 11.09.2012**

அளவெட்டி தெற்கு, நெசவுசாலை ஒழுங்கையை பிறப்பிடமாகவும் அளவெட்டி தெற்கு, அருவம்பற்றுவை வசிப்பிடமாகவும் கொண்ட வாமதேவன் சவுந்தராஜன் அவர்கள் நேற்று முன்தினம் 11.09.2012 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வாமதேவன் மற்றும் புஸ்பவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், நிர்மலா தேவியின் அன்புக் கணவரும் ப. கிரிஜா, ப. தனேஸ் ஆகியோரின் தந்தையும் சற்குணம், சறோஜாதேவி, வடிவழகி, இந்திரா தேவி, நாகேஸ்வரி, நவரட்ணராஜா, லோகேஸ்வரன், பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை 14.09.2012 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அளவெட்டி தெற்கு,
அருவம்பற்று.

தகவல்: குடும்பத்தினர்

(411)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நான் மட்டும் நல்லவன்

ஜான்சன் என்பவன் ஒருநாள் தன்னுடைய நண்பர்களோடு சீட்டு விளையாடிக் கொண்டிருந்தான்.

அவன் தன்னிடமிருந்த அனைத்து பணத்தையும் சீட்டாட்டத்திலே தோற்கடித்து விட்டான். கையிலே மிகுதியாக எதுவுமே கிடையாது.

மறுநாள் வரைக்கும் சாப்பிடுவதற்கு என்ன செய்வது? பணம் கிடையாது. எதற்கும் செலவு செய்ய பணம் இல்லாது திண்டாடினான்.

இவனுக்கு ஒரே யோசனை. அப்போது அங்கே இவனுடைய நண்பன் பிரவுண் வந்தான். இவனது நிலைமை பிரவுனுக்கு புரிந்தது. "கவலைப்படாதே... நாளை வரைக்கும் உனது செலவுக்குரிய பணத்தை நான் தருகிறேன். இப்போதைக்கு இதை வைத்துக் கொள்..." என்று கூறி ஒரு நூறு ரூபாய் நோட்டை அவனிடம் கொடுத்தான்.

ஜான்சன் அதை வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போகிறான். போகும் வழியில் வறுமையிலே கஷ்டப்படும் ஒரு பெண்ணைக் காண்கிறான். அந்தப் பெண் அணிந்திருக்கும் உடையோ மிகவும் அழுக்கு நிறைந்து காணப்பட்டது. சரியாக நடக்கக்கூட முடியவில்லை.

"ஐயா... நான் இன்று பூராகவும் சாப்பிடவில்லை. பட்டினி... நீங்கள் எனக்கு உதவி செய்யவில்லையென்றால் நான் ஆற்றிலே விழுந்து இறந்து விடுவேன்" என்றாள்.

ஜான்சன் மிகவும் இரக்கக்குணம் கொண்டவன். அவனது மனம் மிகவும் வருத்தப்பட்டது.

"கவலைப்படாதே... என்னிடம் நூறு ரூபாய் இருக்கிறது... இதை நீ வைத்துக்கொள்..." என்று சொல்லி அந்தப் பெண்ணிடம் பணத்தைக் கொடுத்தான்.

அவளும் இந்தப் பணத்தை வாங்கிக் கொண்டு இவனை மிகவும் நன்றியோடு பார்த்தாள்.

"ஐயா... மனித குலத்தின் மீது எனக்கு இருந்த நம்பிக்கை எப்போதோ இறந்து விட்டது... அந்த நம்பிக்கைக்கு இப்போது நீங்கள் உயிர் கொடுத்துள்ளீர்கள். உங்கள் கருணையை நான் எப்போதுமே மறக்கமாட்டேன்" என்று கூறிவிட்டு அவள் புறப்பட்டாள்.

இவன் மனம் அன்றைய தினம் நிறைவாக இருந்தது. ஆற்றிலே விழுந்து உயிர்விட இருந்த ஒரு பெண்ணைக் காப்பாற்றியுள்ளேன் என்று நினைத்து சந்தோஷப்பட்டான். அந்த சந்தோசத்தில் அவனுக்கு பசிகூடத் தெரியவில்லை. அன்றிரவு அவன் எதுவுமே சாப்பிடவில்லை. நிம்மதியாகத் தூங்கினான்.

மறுநாள் காலையிலே நிம்மதியாக எழுந்தான்... வாசலிலே தினசரி பத்திரிகை கிடந்தது. எடுத்துப் பார்த்தான். முதல் பக்கத்தில் ஒரு செய்தி; "ஆற்றிலே அடையாளம் தெரியாத ஒரு பெண்ணின் சடலம் கண்டெடுப்பு" என்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. உடனே அந்தச் செய்தியை வாசித்தான்.

நேற்றைய தினம் இவன் சந்தித்துப் பணம் கொடுத்த பெண் என்பதைப் புரிந்து கொண்டான். இப்போது இவனுக்கு ஒரே குழப்பம்.

"என்ன நடந்தது... ஆற்றிலே விழுந்து சாகப் போனவளை... நான்தானே பணம் கொடுத்து மீட்டேன். பணம் இருந்தும் அவள் எதற்காக இறந்து போனாள். மனித குலத்தின்மீது நம்பிக்கை இன்னும் இருக்கிறது- என்று வேறு சொன்னாளே" இவனது குழப்பம் இன்னும் மேலெழுந்தது.

மறுநாள் மறுபடியும் அந்த சூதாட்ட விடுதியில் சீட்டாடிக் கொண்டிருந்தான்.

அவ்வேளையிலே முதல்நாள் பணம் கொடுத்துதவிய பிரவுண் அங்கு வந்தான். அப்போது பிரவுண் இவனைப் பார்த்துக் கேட்டான்...

"நேற்றைய தினம் எங்களை விட்டுவிட்டுப்போன நீ பின்னர் என்ன செய்தாய்?"

"வீட்டிற்குப் போனேன்" என்று கூறினான் ஜான்சன்.

"நான் கொடுத்துதவிய பணத்தை ஏதாவது செலவு செய்தாயா?" என்றான்.

"இல்லையே... ஏன்?" என்று ஜான்சன் கேட்டான்.

நல்ல வேளை... நான் கொடுத்த நூறு ரூபாய் பணம் கள்ள நோட்டு என்றான் பிரவுன்.

"இவ்வுலகம் ஊழல் மயமானது... இவ்வுலகத்திலே நாமும் ஊழலுக்கு உட்பட்டுத்தான் நடக்க வேண்டியுள்ளது" என்பதை விளக்குவதற்காகத்தான் இக்கதை கூறப்பட்டுள்ளது.

உயர்வான எண்ணங்கள் தான் எம்மைக் காப்பாற்றும். நமது சொந்தக்காலில் நிற்பதுதான் நமக்கு கௌரவம். சுயதொழிலில் ஈடுபடவேண்டும். அப்போதுதான் அடுத்தவர்களின் காலில் விழாது வாழலாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வலிப்புநோய் விழிப்புணர்வு நடவடிக்கை யுத்தம் நடந்த கிராமங்களிலும் அவசியம்

## வடமாகாண கல்வியமைச்சின் பிரதிச் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கும் அனைத்து விதமான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் அவசியம் என வட மாகாண கல்வி அமைச்சின் பிரதிச்செயலாளர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வலிப்பு நோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்றுக் காலை யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில்,

வடமாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட இடங்களிலேயே வலிப்பு நோயின் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றது.

அதிலும் உக்கிரமாக சண்டை நடைபெற்ற வன்னிப் பிரதேசத்தில் இந்நோயின் தாக்கம் அதிகமாகவுள்ளது.

இந்நோய்க்கான விழிப்புணர்வுகள் வளர்ச்சியடைந்த நாடுகளில் உச்சநிலையில் காணப்படுகின்றது. இங்கும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் காணப்படுகின்றபோதும் அது கிராமத்தவர்களுக்கு உரிய வகையில் சென்றடைவதில் காலதாமதம் ஏற்படுவதோடு சில வேளைகளில் அவை சென்றடைவதும் இல்லை.

யாழில் அனைத்து துறைகளிலும் ஏதாவது குறை இரு[illegible]தோடு அவை நிவர்த்தி செய்யப்படுவதற்கும் கால தாமதம் ஏற்படுகின்றன.

இந்நிலையில் இவ்வாறான விழிப்புணர்வு நடவடிக்கைகளை யாழில் மட்டுமல்லாது ஏனைய யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்வதற்கு அதிக கவனம் எடுக்க வேண்டும்.

பாடசாலை மட்டங்களிலும் இவ்வாறான விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஏற்படுத்துவதன் மூலமும் எமது எதிர்கால சந்ததியை நோயற்ற ஆரோக்கிய மனிதர்களாக மாற்ற முடியும்.

இவ் விழிப்புணர்வுகளை வைத்தியசாலைகள் மட்டுமன்றி சுகாதார பணிமனைகள், பொதுச் சுகாதார பிரிவினர்கள் போன்றன மேற்கொள்வதன் மூலம் கிராம மட்டத்தவர்களிடமும் இவ் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் குறித்த நிகழ்வு யாழ்.போதனா வைத்தியசாலையின் விசேட நரம்பியல் நிபுணர் திருமதி அஜந்த கேசவராஜ் தலைமையில் நடைபெற்றதோடு பிரதம விருந்தினராக இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிரேஷ்ட நரம்பியல் நிபுணர் பேராசிரியர் [illegible]னி கமகேவும் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் ஸ்ரீ.பவானந்தராஜா ஆகியோர் உட்பட வைத்திய நிபுணர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 45 | 60 | 60 | 70 |
| தக்காளி | 50 | 50 | 40 | 65 |
| மரவள்ளிக்கிழங்கு | 45 | 30 | 35 | 35 |
| கோவா | 50 | 60 | 60 | 60 |
| கரட் | 100 | 100 | 80 | 120 |
| பூசணி | 40 | 25 | 30 | 50 |
| புடோல் | 40 | 30 | 35 | 50 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 60 | 40 | 60 | 70 |
| பாகற்காய் | 45 | 60 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 65 | 70 | 70 | 100 |
| பயற்றங்காய் | 45 | 40 | 75 | 50 |
| லீக்ஸ் | 90 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 45 | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 70 | 60 | 50 | 80 |
| முருங்கைக்காய் | 15 | 30 | 60 | 40 |
| போஞ்சி | 70 | 80 | 70 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 15 | 10 | 10 | 20 |
| தேசிக்காய் | 200 | 180 | 200 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30 | 25 | 25 |

# இராசி பலன்

*13.09.2012*
*(ஆவணி 28, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.03 மணிவரை*
*துவாதசி முற்பகல் 10.35 மணிவரை*
*ஆயிலியம் பின்னிரவு 4.24 மணிவரை*
*இராகுகாலம் 1.33-3.03 மணிவரை*
*சுபநேரம் 7.33-9.03 மணிவரை*
*பிரதோச விரதம்.*

**மேடம்** பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், உற்றார், உறவினர்களின் வருகையுண்டு, விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும், உடன்பிறப்புக்கள் மூலம் உள்ளம் மகிழும் சம்பவங்கள் நடைபெறலாம்.

**மிதுனம்** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள், வழிபாடு காரிய வெற்றியைத் தரும்.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், வைராக்கியத்தோடு செயற்பட்டு காரியம் சாதிப்பீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.

**சிங்கம்** பிறருடைய பொறுப்புக்களையும் எடுத்துச் செய்வதால் மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், மாலை நேரம் மகிழ்ச்சிக்குரிய பயணமொன்று உருவாகலாம், சயன சுகக்குறைவான நாள்.

**கன்னி** வருங்கால நலன் கருதி புதிய திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள்.

**துலாம்** தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், அந்நியர் உதவிகள் கிடைக்கலாம், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரும் நாள்.

**விருச்சிகம்** தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், தொலைபேசி மூலம் மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரும், தொழில் நிமித்தம் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், ஆன்றோர் சந்திப்புண்டு.

**தனுசு** மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்படலாம், பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கூறலாம், பயணங்களின் போது விழிப்புணர்ச்சி அவசியம், மனச்சோர்வான நாள்.

**மகரம்** விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், நினைத்த காரியங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள், அபூர்வ சந்திப்புண்டு, பொருளாதார நிலை திருப்தி தரும்.

**கும்பம்** உறவு, பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், பகைவர்கள் விலகுவர், செய்தொழிலில் விருத்தியுண்டு, கௌரவமான நாள்.

**மீனம்** ஆசைகள் நிறைவேற ஆனைமுகனை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் வந்து சேரும் நாள், தொழில் முன்னேற்றகரமாக அமையும், பிறருக்கு உதவ முன் வருவீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிந்துசிட்டி மயானத்திற்கு அருகில் கிடந்த குப்பைகள் அகற்றப்பட்டன

## வலம்புரி செய்தியை அடுத்து நடவடிக்கை

(சுன்னாகம்)

சுன்னாகம் புத்தூர் வீதியிலுள்ள கிந்து சிட்டி மயானத்திற்கு அருகில் தேங்கிக் கிடந்த கழிவுப் பொருட்கள் வலி.கிழக்கு பிரதேச சபையினரால் முற்றாக அகற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கிந்துசிட்டி மயானத்திற்கு அருகில் தேங்கிக் கிடந்த கழிவுப்பொருட்களால் டெங்கு நோய் பரவக்கூடிய நிலையிலும் துர்நாற்றம் வீசி மக்கள் மூக்கைப் பொத்திய வாறு பயணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கும் தள்ளப்பட்டனர்.

அத்துடன் பருத்தித்துறை வீதியையும் சுன்னாகத்தையும் இணைக்கும் பிரதான வீதியான இவ்வீதியில் நாள்தோறும் பெரும் எண்ணிக்கையான பயணிகள் சிரமத்தின் மத்தியில் பயணம் செய்தனர்.

இவற்றை கருத்திற்கொண்ட வலி.கிழக்கு பிரதேச சபையினரின் உடன் நடவடிக்கை மூலம் இக்கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. துப்புரவு செய்யப்பட்ட இடத்திலும் நாள் தோறும் குப்பைகளை மக்கள் வீசி விட்டுச் செல்வதாகவும் அவ்வாறு வீசாது குப்பை இடுவதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் குப்பைகளை இடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மீண்டும் கழிவுகள் நிறைந்த துர்நாற்றம் வீசக்கூடியவாறு குப்பைகளை இட வேண்டாம் எனவும் வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் அறிவித்துள்ளார். மேற்குறித்த இடத்தில் குப்பைகள் தேங்கி கிடப்பதாகவும் அதனால் டெங்கு பரவக்கூடிய அபாய நிலை இருப்பதாகவும் வலம்புரிப் பத்திரிகையில் சுட்டிக்காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-3)

# களவாடப்பட்ட ஆடு பொலிஸ் நிலையத்தில்

## அடையாளம் காட்டுமாறு பணிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி கொற்றாவத்தை பகுதியில் கடந்த 9 ஆம் திகதி இரவு மோட்டார் சைக்கிளில் இரு நபர்கள் ஆடொன்றை களவாடி கடத்திச் சென்றவேளை ரோந்துப் பணியில் ஈடுபட்ட பொலிஸாரை கண்டு ஆட்டை அவ்விடத்தில் விட்டு தப்பிச் சென்றுள்ளனர்

வடமராட்சி பிரதேசத்தில் அண்மைக்காலமாக ஆட்டுத் திருட்டுக்கள் அதிகரித்துள்ளது. இந்நிலையில் மோட்டார் சைக்கிளில் வரும் இனம் தெரியாத நபர்கள் ஆடுகளைக் களவாடி ஆட்டு முகவர்களுக்கு விற்பனை செய்வதில் ஈடுபட்டு வருகின்றனர்

இச் சம்பவத்தை அடுத்து பொலிஸாரின் ரோந்துப் பணிகள் பலப்படுத்தப்பட்டதை அடுத்து சம்பவதினம் களவாடப்பட்ட ஆட்டை மோட்டார் சைக்கிளில் இருவர் கடத்தி சென்றுள்ளனர். பொலிஸார் குறித்த ஆட்டை மீட்டதுடன் இரு சந்தேக நபர்களை வலை வீசித்தேடி வருகின்றனர்.

ஆடு தற்போது வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. உரிமையாளர்களை அடையாளம் காட்டுமாறும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.(அ-3-24)

# பேருந்தை தீயிட்டு எரித்த விவகாரம்; சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

வடமராட்சி தொண்டைமானாறு பகுதியில் தனியார் பேருந்தை தீயிட்டு கொளுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று முக்கிய சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் உத்தர விட்டுள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு தனியார் பேருந்தை தீயிட்டு கொளுத்திய சம்பவத்தில் உரிமையாளரால் கொடுக்கப் பட்ட முறைப்பாட்டை அடுத்து அச்சுவேலி பகுதியைச் சேர்ந்த 4 சந்தேக நபர்களை வல்வெட்டித்துறை பொலிஸார் கைதுசெய் தனர்.

இதில் ஒரு சந்தேக நபரை பிணையில் விடுவித்ததுடன் மூன்று சந்தேக நபர்களை நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் மூவரையும் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.(அ-3-24)




# நூல் வெளியீட்டு விழா

வேலணை ஒரு வரலாற்று அறிமுகம் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொன். பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவாட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கௌரவ விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

# இளைஞர் பரிமாற்று வேலைத்திட்டம்

(தனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நாட்டில் இன ஐக்கியத்தையும் தேசிய ஒருமைப்பாட்டினையும் ஏற்படுத்துவதற்காக ஏற்பாடு செய்யும் உள்நாட்டு இளைஞர் பரிமாற்று வேலைத்திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து விடேச தேவைக்குட்பட்ட 50 இளைஞர், யுவதிகள் நெடுந்தீவிற்கு நாளை மறுதினம் சனிக்கிழமை வருகை தரவுள்ளனர்.

நெடுந்தீவு பிரதேசத்தில் உள்ள இளைஞர், யுவதிகளின் வீடுகளில் தங்க வைக்கப்படும் இவ் இளைஞர், யுவதிகள் நெடுந்தீவில் பல்வேறு கலை, கலாசார விளையாட்டு மற்றும் சிரமதான் நிகழ்வுகளிலும் கலந்து கொள்ள உள்ளனர் என தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட இளைஞர் சேவை உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா அறிவித்துள்ளார்.

★★★★★★★★★★

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நாட்டில் இன ஐக்கியத்தையும் தேசிய ஒருமைப்பாட்டினையும் ஏற்படுத்துவதற்காக ஏற்பாடு செய்யும் தேசிய இளைஞர் பரிமாற்றுத் திட்டத்தின் கீழ் மொனராகலை மாவட்டத்தில் இருந்து விசேட தேவைக்குட்பட்ட 40 இளைஞர், யுவதிகள் நேற்று கைதடி நவீல்ட் பாடசாலைக்கு வருகை தந்துள்ளனர்.

இவ் இளைஞர், யுவதிகள் இன்று முதல் நாளை மறுதினம் சனிக்கிழமை வரை அங்கு தங்கி பல்வேறு கலை, கலாசாரம், விளையாட்டு, சிரமதான நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவுள்ளனர் என தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட உதவி இயக்குநர் த.ஈஸ்வரராஜா அறிவித்துள்ளார். (அ-9-37)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்த நாவாந்துறைப் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானஜோதி அறிவித்துள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 10 மணிவரை மானிப்பாய் வீதி, ஓட்டுமடம் சந்தியிலும் முற்பகல் 10 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை ஜின்னா வீதியிலும் முற்பகல் 11 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை ஆசாத் வீதியிலும் நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 1.30மணி வரை நாவலர் வீதி, எம்.ஓ. ஒழுங்கைப் பகுதியிலும் வைத்து வழங்கப்படும். (அ-9)

# குடியேற்றத்திட்ட வீதி புனரமைப்பு

(தனங்கிளப்பு)

உலக உணவுத்திட்டத்தின் கீழ் நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் இருந்த மந்துவில் வேலைக்காடு குடியேற்றத்திட்ட வீதி புனரமைப்பு செய்யப்பட்டு வருகிறது.

நீண்ட காலமாக புனரமைப்பு செய்யப்படாது குன்றும் குழியுமாக காணப்பட்ட இவ்வீதியே மந்துவில் தியாகி இரத்தினம் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் அப்பகுதி மக்களால் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (அ-3-37)

# கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கை.சரவணன் எழுதிய "வானம் விழுந்த நெல்வயல்" கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்ககு அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வெளியிடல் குறிப்புகளை ந.மயூரரூபனும் நூலாய்வினை தி.செல்வமனோகரனும் ஆற்றவுள்ளனர். (அ-9)






வலிப்பு நோய் தொடர்பான விழிப்புணர்வுப் பேரணி நேற்று யாழ்.நகரில் இடம்பெற்றது. யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக காலை 7.30 மணியளவில் ஆரம்பமான இந்தப் பேரணி யாழ்.பொது நூலகத்தை முற்பகல் 9 மணியளவில் சென்றடைந்தது. இந்தப் பேரணியில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா மற்றும் வைத்தியர்கள், திணைக்களப் பணிப்பாளர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் பங்கு கொண்டிருந்தனர். (படங்கள்:- என்.குமார், அலுவலகச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பிரதேச செயலாளர் பிரிவில் 4325 குடும்பங்கள் மீளக்குடியமர்வு

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் இதுவரை 4 ஆயிரத்து 325 குடும்பங்களைச் சேர்ந்த 15ஆயிரத்து 489 பேர் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர் என பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் கடந்த 10 ஆம் திகதி பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடை பெற்றது. இதன்போது சமர்ப்பிக்கப்பட்ட கூட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிற்குள் 4ஆயிரத்து 325 குடும்பங்களைச் சேர்ந்த 15ஆயிரத்து 489 பேர் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இதில் வன்னியிலிருந்து வந்த ஆயிரத்து 142 குடும்பங்களைச்சேர்ந்த 3 ஆயிரத்து92 பேரும் உயர் பாதுகாப்பு வலயங்களில் 990 குடும்பங்களைச்சேர்ந்த 3ஆயிரத்து 591 பேரும் முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வில் ஆயிரத்து 993 குடும்பங்களைச்சேர்ந்த 8ஆயிரத்து 255 பேரும் இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியோரில்200 குடும்பங்களைச் சேர்ந்த 551 பேரும் மொத்தமாக 4 ஆயிரத்து 325 குடும்பங்களைச்சேர்ந்த 15 ஆயிரத்து 489 பேரும் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குப் பல உதவிகள் பிரதேச செயலகமூடாக வழங்கப்பட்டுள்ளன. இதில் 345 குடும்பங்களுக்கு நிரந்தரவீடுகள் அமைத்துத் கொடுக்கப்பட்டுள்ளது. 100குடும்பங்களுக்கு தற்காலிக குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர 66 குடும்பங்களுக்கு மலசல கூடமும் 2 ஆயிரத்து 217 குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா பணமும் கொடுக்கப் பட்டுள்ளது.

மேலும் ஆயிரத்து 751 குடும்பங்களுக்கு குடிசைகள் அமைப்பதற்காக தலா 20 ஆயிரம் ரூபாவும் ஆயிரத்து 894 குடும்பங்களுக்கு நிக்கொட் நிறுவனத்தால் வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு ஆயிரத்து 879 குடும்பங்களுக்கு உணவல்லாத பண்டங்களும் 747 குடும்பங்களுக்கு தகரமும் ஆயிரத்து 86 குடும்பங்களுக்கு சீமெந்துப் பைக்கற்றுக்களும் 151 குடும்பங்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் 100 குடும்பங்களுக்கு விவசாய உபகரணமும் 16 குடும்பங்களுக்கு கடற்றொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-6)


YARL Properties

(புதிய பரிமாணத்துடன் சிறந்த சேவை)
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் அழைகக வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் Brown வீதியில் 3 1/2 பரப்பு காணி பழைய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு உடன் தொடர்பு கொள்ளுங்கள்

விற்றல், வாங்குதல் (Sales/Buy)
வாடகை (Rent)
பராமரிப்பு (Property Managment)
அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள்

36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்
E-Mail - yarlproperties@gmail.com


# கிருஷ்ணபுரம் கிழக்கிற்கு மின்சாரம் கிடைக்குமா?

## மக்கள் காத்திருப்பு

(இராமநாதபுரம்)

கிளிநொச்சி-கிருஷ்ணபுரம் கிழக்கு பகுதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்பட வில்லையென அப்பகுதி வாழ் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிருஷ்ணபுரம் கிராமசேவையாளர் பிரிவில் மீள்குடியேற்றம் நடைபெற்று மூன்று வருடங்கள் கடந்த நிலையில் மேற்படி பகுதிக்கு இன்னும் மின்சாரம் வழங்கப்படவில்லையென குறிப்பிடப்படுகிறது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாக ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் மின்சாரம் வழங்கும் நிகழ்வில் மின்சக்தி அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், அரசாங்க அதிபர் ஆகியோர் கலந்து கொண்டு கிருஷ்ணபுரம் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள விநாயகபுரம், கிருஷ்ண புரம் மத்திய வீதி, கிருஷ்ணபுரம் மேற்கு ஆகிய பகுதிகளுக்கு அன்றையதினம் மின்சாரம் வழங்கி வைத்தனர்.

ஆனால், மின்கம்பங்கள் நாட்டப்பட்ட நிலையில் கிருஷ்ணபுரம் கிழக்கு கிராமத்திற்கு மின்சாரம் அன்றையதினம் வழங்கப்படவில்லை.

எனவே, கிருஷ்ணபுரம் கிழக்கு மக்கள் மின்சாரம் இன்றி தொடர்ந்து இருளில் மூழ்கியுள்ளூர்கள். ஆதலால் உரியதரப்பினர் இப்பகுதிக்கு விஜயமொன்றை மேற்கொண்டு மின்சாரம் வழங்கப்படாத காரணத்தைக் கண்டு அறிந்து இருளில் மூழ்கிக் கிடக்கும் மேற்படி கிராமத்திற்கு ஒளியூட்டுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-269)

# புற்றுநோய் வைத்தியசாலைக்கான வேலைகள் 15 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புற்றுநோய் வைத்தியசாலைக்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

கடந்தாண்டு யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலை அமைக்கவென தென்னிலங்கை தெய்வேந்திரமுனையில் இருந்து வடக்கின் பருத்தித்துறை முனை வரையான நடைபாதை பயணத்தின் மூலம் ரூபா ஒரு கோடிக்கும் மேற்பட்ட பணத்தை சேகரிப்பதற்காக ரயல் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் நிதி சேகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பணம் சேகரிக்கப்பட்டு ஒருவருடம் நிறைவடையும் நிலையிலும் புற்றுநோய் வைத்தியசாலை அமைப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாததுடன் குறிப்பிட்ட நிதியும் உரியவர்களின் கைகளைச் சென்றடையவில்லையா? எனவும் கேள்வி எழுப்பப்பட்டது.

இந்நிலையில் வலி. வடக்குப் பிரதேச சபை கடந்த மாதம் இந்தப் பணத்துக்கு என்ன நடந்தது என்ற கேள்வியுடன் தீர்மானத்தை நிறைவேற்றி வடமாகாண சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் செயலாளர் மற்றும் சுகாதாரத் திணைக்கள உயர் அதிகாரிகளுக்கும் தீர்மானத்தின் பிரதி அனுப்பப்பட்டு இருந்தது.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 15 ஆம் திகதி புற்றுநோய் வைத்தியசாலைக் கட்டடத்துக்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதா? வலி வடக்குப் பிரதேச சபைக்கும் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-9)


ஒரே ENGLISH COURSE மூன்று தகைமைகள்

1.Spoken English / Certificate / Dip in English
(Speaking, Reading, Listening and writing)
2.Personality Development
3.Leadership Training

6th Batch: Mon to Thu
7th Batch: Sat &Sun
ஒரு Batchஇல் 10 மாணவர்கள் மாத்திரம் அனுமதிக்கப்படுவர்

எதிர்கால சவால்களை வெல்லக்கூடிய விதத்தில் ஆங்கிலப் பாடநெறிகள் தயாரிக்கபட்டுள்ளதால் மாணவர்கள் ஆங்கிலம் கதைப்பது உறுதிப்படுத்தப்படுவதுடன் தலைமை தாங்கும் இயல்பும் வளர்கின்றது.

இவ் ஆங்கிலப் பாடநெறிமுழுமையான ஆங்கில சூழலில் ஆங்கிலத்தை தாய்மொழியாக கொண்டவர்களுக்கு நிகரான அனுபவமிக்க ஆசிரியர்களினால் நடாத்தப்படுகின்றது. மாணவர்கள் ஆங்கிலத்தை பயிலுவது மேலும் இலகுவாகின்றது.

சர்வதேச ஆங்கிலத் தகைமைகளான
IELTS, TOEFL, City & Guilds, Etc...

VISA SERVICE / STUDY ABROAD

(ஆங்கிலப் பாடநெறியில் கலந்துகொள்ளும் சகலமாணவர்களுக்கும் சிங்களம் மற்றும் அடிப்படை கணனிப் பாட நெறிகள் இலவசமாக கற்பிக்கப்படும்.)

IISEEES NALLUR CAMPUS
762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
0212224728, 0777444225
(C-1020)



கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மூலம் 1<br>உயரம்:-5'4"<br>கி.பா:-27<br>தொழில்:- டுபாய் மின். இ.உத்தியோகம்<br>B/406 | பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சித்திரை 4<br>உயரம்: 5'5"<br>கி.பா:-22, 4 இல் செவ்வாய்<br>தொழில்:-MBA, BCA உதவி முகாமையாளர் (தனியார் நிறுவனம்)<br>G/443 |
| பிறப்பு:- 1969 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- புனர்பூசம் 4<br>உயரம்:-5'9"<br>கி.பா:-27<br>தொழில்:- டென்மார்க் P.R. விவாகரத்தானவர்<br>B/407 | பிறப்பு:- 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- கேட்டை 4<br>உயரம்: 5'5"<br>கி.பா:-85, 8 இல் செவ்<br>தொழில்:-Bsc கணனி மாணவி U,K.ஸ்ருடன் விசா P.R. உள்ள மணமகன்<br>G/447 |
| பிறப்பு:-1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பூராடம் 2<br>உயரம்:-5'5"<br>கி.பா:-48, 8 இல் செவ்.<br>தொழில்:-லண்டன் படிப்பு விசா P.R. உள்ள பெண்<br>B/414 | பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>உயரம்: 5'4"<br>கி.பா:- 87, 12 இல் செவ்.<br>தொழில்:- BCA வங்கி உத்தியோகத்தர்<br>G/444 |
| பிறப்பு:- 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பூராடம் 2<br>உயரம்:-5'7"<br>கி.பா:-3.75<br>தொழில்:-Bsc. சீமா. இன்ஜினியர் படித்த பட்டதாரிப் பெண்<br>B/410 | பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அத்தம் 3<br>உயரம்: 5'3"<br>கி.பா:- 27.75, 12 இல் செவ்<br>தொழில்:- ஆங்கில மூல பாடசாலை அதிபர் (தனியார்)<br>G/471 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.கிழக்கு பிரதேச சபையின் புதிய கட்டடத்திற்கு கழிவு ஒயில் வீச்சு

## ஈனத்தனமான செயல் என கண்டன தீர்மானம்

(வலிகாமம்)

வலி.கிழக்கு பிரதேச சபையின் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியினை சம்பிரதாய முறைப்படி திறக்க இருந்த வேளை விசமிகளால் கட்டடத்திற்கு கழிவு ஒயில் ஊற்றி ஈனத்தனமான செயலில் ஈடுபட்டதை வன்மையாகக் கண்டிப்பதாக வலி.கிழக்கு பிரதேச சபையில் அண்மையில் இடம் பெற்ற கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும்,சரித்திர பிரசித்தி பெற்ற செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவத்திற்கு சந்நிதி ஆலய பரிபால்ன சபையினர் 25 வருடங்களுக்கு முன்பு தொண்டைமானாறு நீரேரிப் பகுதியூடாக மண்பாலம் அமைத்து அக்காலத்தில் மக்கள் அப்பாதையூடாக ஆலயத்திற்கு சென்று வந்துள்ளனர். பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக நீரேரியூடாக பாதை அமைப்பது தடை செய்யப்பட்டது.

எனவே, இவ்வாண்டு மகோற்சவம் அடியார்கள் சென்று வருவதற்கு நீரேரிப் பகுதியில் தற்காலிக மண் பாதையை வலி. கிழக்குப் பிரதேச சபை மூலம் அமைத்துத் தருமாறு கோரி சந்நிதி ஆலய பரிபாலன சபையினர் கடிதம்மூலம் கோரியதற்கிணங்க சபையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், உறுப்பினர்கள், கடல் தொழில் உறுப்பினர்கள் ஆகியோர் இப்பாதை அமைப்புப் பணிக்கு பெரிதும் பங்காற்றியிருந்தனர்.

அடியார்கள் பாவனைக்கு விடும் தருணத்தில் சில விசமிகளால் நீரேரி பாலத்தின் வான் கதவுகளை திறந்து பாதையை சிதைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சியானது, தவிசாளர், நலன்புரிச்சங்க அங்கத்தவர்கள், சபை உறுப்பினர்கள் ஆகியோர் உடன் நடவடிக்கையின் மூலம் முறியடிக்கப்பட்டது.

இவ் இழிவுச் செயலில் ஈடுபட்டவர்களை வன்மையாகக் கண்டிக்கிறோம் என தெரிவிக்கப்பட்டது. அத்துடன் சிறைச்சாலையில் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் இருவரின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிப்பதுடன் இத்தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம் என கூறப்பட்டது. (அ-2)

## இராணுவம் மூன்று குளங்களை புனரமைக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியமர்ந்துள்ள முஸ்லிம் கிராமங்களில் உள்ள மூன்று குளங்களை இராணுவத்தினர் புனரமைக்கவுள்ளனர்.

சின்னக்குளம், வில்லவராஜன் குளம், கோம்பயன்குளம், மணல்குளம் என்பவற்றையே இராணுவத்தினர் புனரமைக்கவுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த 10 ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதேச செயலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# யாழ். ஜெய்ப்பூரின் சேவைக்கு வலுச்சேர்க்க நடைபயணம்

யாழ். ஜெய்ப்பூரில் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் சேவையின் முக்கியுத்துவத்தையும் அவசியத்தையும் கருத்திற்கொண்டு தேவையான நிதியினைச் சேகரிக்கும் முகமாக மாத்தறை தொன்தர முனையிலிருந்து பருத்தித்துறை தெய்வேந்திர முனை வரையுள்ள முழு நீளமாக 800 கிலோ மீற்றர் தூரம் வரையிலான நடைபயணம் கடந்த ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி மாத்தறையிலிருந்து ஆரம்பித்துள்ளது.

இரண்டு வருடங்களாக இலங்கையில் கிக்கடுவவில் வசித்துவரும் திருமதி ஒலிவியா அகஸ்ரின் கனடா நாட்டு பிரஜையாவார். அவரது கணவர் தற்போது கொழும்பிலுள்ள ஜோன்கீல்ஸ் நிறுவனத்தில் பணியாற்றி வருகின்றார்.

நடந்து திரிவது இவரது பொழுதுபோக்காகும். இவர் ஒருநடைப்பிரியர். தான் நடப்பது போன்று காலிழந்தவர்களும் நடக்க வேண்டுமென்பதே இவரது பேரவாவாகும். இதனடிப்படையில் இப்பேரணியை இவர் ஆரம்பித்துள்ளார்.

இவரது இப்பணிக்கு சர்வதேசம் பூராகவுள்ள அவரது நண்பர்கள் ஆதரவும் ஊக்கமும் வழங்கி வருகின்றனர். இதன் மூலமாக வெளிநாடுகளிலிருந்தும் நிதியுதவியைப் பெற்றுக்கொள்ள முடியுமென நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இதுவரை 600 பவுண்ட் நிதி கிடைக்கப் பெற்றுள்ளதாக பெருமிதமடைகின்றார்.

கடந்த ஓகஸ்ட் 22 ஆம் திகதி மாத்தறையிலிருந்து ஆரம்பமாகியுள்ள இந் நடைபயணம் அவரது பிறந்த தினமான ஒக்டோபர் 18 ஆம் திகதி பருத்தித்துறையில் நிறைவுபெறுவது தனது வாழ்க்கையில் முக்கியமான தொரு நிகழ்வு என்பதில் பெருமிதம் கொள்கின்றார்.

இவரது குறிக்கோளும் நன்முயற்சியும் வெற்றி பெற வேண்டுமென யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம் மனதார வாழ்த்துவதோடு இவரது அரிய பணிக்கு சகல மக்களும் முழுமையான ஒத்துழைப்பும், ஆதரவும் வழங்குவதன் மூலமாக வலுவிழந்தோர் இயல்பு வாழ்வு வாழ வழிவகுப்போம் என யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் டாக்டர் திருமதி. ஜெகணேசமூர்த்தி அறிவித்துள்ளார். (அ-9)

# யாழ். மாவட்டத்தில் சட்டவிரோதமாக 70 ஆயிரம் பனைகள் தறிக்கப்பட்டன

## பனை வளம் பாதிப்பு எனவும் சுட்டிக்காட்டு

(கரவெட்டி)

யாழ். மாவட்டத்தில் கடந்த யுத்தகால நிலையில் அதிகளவான பனைமரங்கள் தறிக்கப்பட்டதனால் யாழ். மாவட்டத்தில் பனை சார் உற்பத்திப் பொருட்கள் வீழ்ச்சியடைந்துள்ளதாக வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் எஸ். பரஞ்சோதி சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமராட்சி தெற்கு, மேற்குப்பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுக்காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் கடந்த யுத்தகாலங்களில் பனை, தென்னை வள அபிவிருத்தி சங்கங்களின் அனுமதி இன்றி சுமார் 70 ஆயிரம் பனை மரங்கள் சட்டவிரோதமாக தறிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இச் செயற்பாடு இன்று வரை தொடர்வதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் பனை சார் உற்பத்தி பொருட்களும் அதனை நம்பியுள்ள தொழிலாளர்களும் மிகவும் தமது வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியாத நிலையில் காணப்படுகின்றனர்.

இதனைக் கட்டுப்படுத்த பொலிசார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் செயற்குழு கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்தார். (அ-3-24)


# மத்தியஸ்தரை நியமிக்க வேண்டும்; பல்கலை. ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக மத்தியஸ்தம் வகிப்பதற்கு மத்தியஸ்தர் ஒருவரை நியமிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை மறுதலிப்பதற்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் ஏகமனதாக தீர்மானித்துள்ளதாக அச்சம்மேளத்தின் தலைவர் கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி கூறினார்.

மத்தியஸ்தத்தை ஏற்றுக் கொள்ளாமைக்காக பதவிகளிலிருந்து வெளியேற்றப்படுவதற்கு அல்லது சிறைக்கு செல்லவும் தாம் தயார் என அச்சம்மேளத்தினர் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித்தனர்.

கைத்தொழில் பிணக்குச் சட்டத்தின் படி, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் மீது தன்னார்வ மத்தியஸ்த தொழில் ஆணையாளர் விதித்துள்ளார். (அ-2)



இலங்கை கள பறவையியல் குழு விலங்கியல் துறை கொழும்பு பல்கலைக்கழகத்தின் வழிகாட்டலின் கீழ் இலங்கை நண்பர்களுக்கான நோர்வே மன்றத்தின் அனுசரணையுடன் கல்வி அமைச்சு, தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் ஆகியவற்றின் பங்களிப்புடன் சிறுவர் மகிழ்வகம் **இயற்கையின் வலிமையூடான ஒருமைப்பாடு** என்ற நிகழ்ச்சித் திட்டத்தை யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தின் ஒரு பிரதான பகுதியாக சிங்கராஜாவனத்தில் அண்மையில் நடைபெற்ற இயற்கை மற்றும் பறவை ஆய்வு முகாமில் ஐந்தாவது தடவையாக யா/திருக்குடும்ப கன்னியர் மடம், யா/பரியோவான் கல்லூரி, கொழும்பு தேஸ்ரன் கல்லூரி, கம்பஹா ரத்னாவலி பாலிக்கா வித்தியாலயம், எக்கல ஜி.வி. சேனநாயக்கா [illegible] பாலிக்கா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், [illegible] படங்களில் காணலாம்.

## சிறுகதை தொகுதி வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

கே.ஆர். டேவிட் எழுதிய பாடுகள் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் நூலின் வெளியீட்டுரையினை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் வி.ரி. கணேசலிங்கம் ஆற்ற முதற்பிரதியை யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியகலாநிதி சி.குமரவேல் பெற்றுக் கொள்வார். ஆய்வுரையை முன்னாள் தினகரன் ஆசிரியர் சிவா. சுப்பிரமணியம் ஆற்றுவார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணயத்தாள் அச்சிடும் போது மும்மொழிக்கு முக்கியத்துவம்

## மத்திய வங்கி அறிவிப்பு

எதிர்வரும் காலங்களில் நாணயத்தாள் அச்சிடும் போது மும்மொழிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும் என புழக்க நிதித் திணைக்களம் அறிவித்துள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையத்தினால் மனித உரிமை ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பான விசாரணைகளின் போது மத்திய வங்கி இதனை அறிவித்துள்ளது.

அரசியல் சாசனத்தில் சிங்கள, தமிழ் மொழிகளுக்கு சம சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ள போதிலும் நாணயத்தாள்களை அச்சிடும் போது இந்தக் கோட்பாடு பின்பற்றப்படுவதில்லை என மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அச்சிட்டு வெளியிடப்படும் இந்த நாணயத்தாள் நாட்டின் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் செல்லுபடியாகும் என சிங்கள மொழியில் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்த வாசகம் தமிழ் மொழியிலும் குறிப்பிடப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் நாணயத்தாள் அச்சீடு செய்யும் போது மும்மொழிகளுக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கப்படும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது. (அ-2)

# ஐக்கிய நாடுகளின் மீளாய்வுக்குழுவை நீதிபதிகளாக கொள்ள முடியாது

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

இலங்கைக்கு நாளை வெள்ளிக்கிழமை வரவுள்ள ஐக்கிய நாடுகளின் மீளாய்வுக்குழு இலங்கையில் மனித உரிமை மேம்பாடுகளை மாத்திரம் அவதானிக்க முடியும்.

இதனை தவிர அந்தக்குழுவின் விஜயத்தை இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் என்ற அடிப்படையில் கருதக் கூடாது என்று இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா, ஸ்பெயின் மற்றும் பெனின் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய இந்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபை குழு இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வரவுள்ளது.

இந்நிலையில் அந்தக் குழுவில் உள்ளோரை நீதிவழங்கும் நீதிபதிகளாக கொள்ள முடியாது.

அத்துடன் சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிந்து இந்தக் குழுவை தாம் இலங்கைக்கு அழைக்கவில்லை.

இவ் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பிரதிநிதிகள் நாட்டின் எந்தப் பகுதிக்கும் விஜயம் செய்து பல்வேறுதரப்பினருடனும் பேச்சு நடத்த சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

இதற்கு அரசாங்கம் எவ்வித தடைகளையோ கட்டுப்பாடுகளையோ விதிக்காது என்றார்.

இதேவேளை இந்தக் குழு இலங்கைக்கு வந்து சென்றதும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2)

# நாம் ஆதரவளிக்க வேண்டுமாயின் நிபந்தனைகளை பூர்த்தியாக்குங்கள்

## முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்து

கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைப்பதற்கு ஆதரவளிக்க வேண்டுமாயின் ஆளும் கட்சி சில நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு சில நிபந்தனைகளை விதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணசபையில் இரண்டுஅமைச்சுப்பதவிகள் அதாவது கூட்டமைப்பிற்கு கிடைக்கப்பெற்ற போனஸ் ஆசனத்தை முஸ்லிம் காங்கிரஸிற்கு வழங்குதல் ஒரு அமைச்சர் பதவி, ஒரு பிரதி அமைச்சர் பதவி அல்லது மூன்று பிரதிஅமைச்சர் பதவிகள் ஆகியவற்றை வழங்க வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

அதிகாரப்பகிர்வு தொடர்பான சில விடயங்கள் குறித்தும் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்துள்ளது. இந்த நிபந்தனைகள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்கு ஆதரவளித்து முதலமைச்சர் பதவியை பெற்றுக் கொள்ள வேண்டுமென கட்சியின் சில உறுப்பினர்கள் வலியுறுத்தி வருவதாக குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# ஐ.தே.கவிற்கு விதிக்கப்பட்ட இடைக்கால தடை நீக்கம்

தேசிய சட்டத்தரணிகள் சங்கத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் செயற்பாடுகளை தடுக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவிற்கு விதிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவு தொடர்ந்தும் நீடிப்பதை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்றைய தினம் நிராகரித்துள்ளது.

இதற்கமைய இதுவரை பிறப்பிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையுத்தரவு நேற்றுடன் முடிவடைந்தது இந்த மனு மீதான விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி மீண்டும் இடம்பெறவுள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிபதி தம்மிக்க கனேபொல முன்னிலையில் நேற்றையதினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (அ-2)




★ 1503-மைக்கலாஞ்சலோ புகழ்பெற்ற டேவிட் என்ற சிலையை உருவாக்கும் பணிகளை ஆரம்பித்தார்.

★ 1609-ஹென்றி ஹட்சன் பின்னர் ஹட்சன் ஆறு எனப் பெயரிடப்பட்ட ஆற்றை அடைந்தார்.

★ 1759-கனடாவின் கியூபெக் நகருக்கருகாமையில் இடம்பெற்ற போரில் பிரித்தானியப் படைகள் பிரெஞ்சுப் படைகளைத் தோற்கடித்தன.

★ 1788-நியூயோர்க் நகரம் ஐக்கிய அமெரிக்காவின் தற்காலிக தலைநகராக அறிவிக்கப்பட்டது.

★ 1791-பதினாறாம் லூயி மன்னன் பிரான்சின் புதிய அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டான்.

★ 1814-பிரித்தானியர் மேரிலாந்தின் பால்ட்டிமோர் நகரைக் கைப்பற்ற எடுத்த முயற்சி தோல்வியடைந்தது.

★ 1847-மெக்சிக்கோ- அமெரிக்கப் போர்: அமெரிக்கப் படையினர் மெக்சிக்கோ நகரைக் கைப்பற்றினர்.

★ 1898-ஹனிபல் குட்வின் செலுலோயிட் புகைப்படச் சுருளைக் கண்டு பிடித்தார்.

★ 1914-முதலாம் உலகப் போர்: தென்னாபிரிக்கப் படையினர் ஜேர்மனியின் நமீபியா மீது தாக்குதலை ஆரம்பித்தனர்.

★ 1923-ஸ்பெயினில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் மிகுவேல் பிறிமோ டி ரிவேரா ஆட்சியைக் கைப்பற்றினான்.

★ 1939-கனடா இரண்டாம் உலகப் போரில் குதித்தது.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: இத்தாலி எகிப்தினுள் நுழைந்தது.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் குண்டுகள் பக்கிங்ஹாம் அரண்மனையைச் சேதப்படுத்தியது.

★ 1943-சியாங் காய் ஷேக் சீனக் குடியரசின் ஜனாதிபதியானார்.

★ 1948-இந்தியப் படைகள் ஐதராபாத்தை இந்திய ஆளுமையின் கீழ் கொண்டு வந்தன.

★ 1949-இலங்கை, இத்தாலி, பின்லாந்து, ஐஸ்லாந்து, ஜோர்தான் ஆகிய 6 நாடுகள் ஐ.நாவின் அங்கத்துவம் பெற சோவியத் ஒன்றியம் தடை செய்தது.

★ 1953-நிக்கிட்டா குரு ஷேவ் நாட்டின் உயர் பதவியான சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஆனார்.

★ 1968-அல்பேனியா வார்சா ஒப்பந்தத்தில் இருந்து விலகியது.

★ 1971-நியூயோர்க்கில் சிறைக்கைதிகளின் கிளர்ச்சியைக் கட்டுப்படுத்த பொலிஸார் எடுத்த நடவடிக்கையில் 42 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1989- தென்னாபிரிக்காவில் நிறவெறிக்கெதிரான மாபெரும் போராட்டம் டெஸ்மண்ட் டுட்டு தலைமையில் இடம்பெற்றது.

★ 1993- நோர்வேயில் இடம்பெற்ற இரகசியத் தொடர் பேச்சுவார்த்தைகளை அடுத்து பாலஸ்தீனத் தலைவர் யாசர் அரபாத்துக்கும் இஸ்ரேலியப் பிரதமர் இட்சாக ரபீனுக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் எட்டப்பட்டது.

★ 1994-யுலிசெஸ் விண்கலம் சூரியனின் தென் முனையைக் கடந்தது.

★ 1999- மொஸ்கோவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 119 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1916-ரூவால் டால், எழுத்தாளர் (இ.1990)

★ 1969-ஷேன் வோர்ன், அவுஸ்திரேலியத் துடுப்பாளர்

### இறப்புக்கள்

★ 1598- இரண்டாம் பிலிப்பு, ஸ்பானிய, போர்த்துக்கல் இலங்கை மன்னன் (பி.1526)

★ 1996-டுப்பாக் ஷகூர், அமெரிக்க ராப் இசைக் கலைஞர் (பி.1971)

★ 2009- அரங்க முருகையன், தமிழறிஞர் எழுத்தாளர் (பி.1932)

### அரங்க முருகையன்

அரங்க முருகையன் லண்டனில் வாழ்ந்த தமிழ்ப் பேராசிரியர், எழுத்தாளர். ஏராளமான சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், நாடகம் எழுதியவர். இதழாசிரியர் தமிழ்மணி என்று போற்றப்படுபவர்.

### வாழ்க்கைக்குறிப்பு

தமிழ்நாடு கும்பகோணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அரங்க முருகையன் தனது உயர்நிலை மற்றும் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பினை தமிழகத்திலும் சிங்கப்பூரிலும் பெற்றுக் கொண்டார். இவரது துணைவியார் சுசீலா (சுசேதா) அம்மையாரும் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட ஒரு போராளியின் மகளாவார்.

**தொழில்:** பின்னாளில் பிரித்தானிய வான்படையின் எழுதுவினைஞராக தேர்வு பெற்று சுமார் இருபது ஆண்டுகள் சிறப்புடன் பணியாற்றித் தரம் உயர்ந்து பின்னாளில் தலைமை எழுதுவினைஞராகவிருந்து 1972 இல் பிரித்தானிய படைக்கலைப்பின் போது தனது பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

### நூல்கள் இயற்றல்

இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிய பல நூறு கதை, கவிதை, கட்டுரைகள் பரவலாகத் தமிழகத்திலும் தமிழ் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் உள்ள ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

லண்டனில் உள்ள ஈழத்தமிழருடன் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்த அரங்க முருகையன் தமிழீழம் கோரி ஐக்கிய நாடுகள் பொது மன்றத்தில் முழக்கம் என்ற தலைப்பில் இவர் 1980 இல் கும்பகோணத்தில் நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார். சோழர் வெற்றி என்ற இவரது மற்றொரு நூலும் தமிழரின் வரலாற்றின் செழுமைமிகு காலகட்டத்தினைப் பதிவுக்குள் உள்ளாக்கியுள்ளது.

அரங்க முருகையன் எழுதி வெளியாகிய இறுதி நூல் பழந்தமிழரின் வியத்தகு நிலத்திணை உயிர் நுண்ணறிவு, மரம், செடி, கொடிகள் பற்றிய தமிழரின் மூலிகை அறிவினை விதந்து கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது.

### மறைவு

அரங்க முருகையன் 2009 ஆம் ஆண்டு செப்டெம்பர் 13 ஆம் திகதி முடக்குவாத நோயினால் பாதிக்கப்பட்டு லண்டனில் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் விஜயத்தை எதிர்த்து அறப்போராட்டம் நடைபெறும்

## வைகோ அறிக்கை

சாஞ்சியில் புத்தமத கல்விமைய விழாவுக்கு வருகை தரும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக எதிர்ப்புப் போராட்டம் தடைகளை மீறி நடைபெறும் என வைகோ அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார். அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரம் வருமாறு,

மத்தியப் பிரதேச மாநிலத்தில் விதிஷா நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட சாஞ்சியில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெற இருக்கும் புத்தமத கல்வி மையத்திற்கு அடிக்கல் நாட்டும் விழாவில் பங்கேற்க வருகின்ற ஜனாதிபதி ராஜபக்ஷ முள்ளிவாய்க்கால் சம்பவத்துக்கு காரணமானவர்.

அன்பை, மனித நேயத்தை, சகிப்புத் தன்மையை போதித்த புத்தரின் நினைவாக அசோகர் எழுப்பிய புத்த விகாரைக்குள் அடியெடுத்து வைக்கிறார். அதனால் சாஞ்சிக்கு வர இருக்கும் ராஜபக்ஷவுக்கு எதிராக கறுப்புக் கொடி அறப்போர் ஆர்ப்பாட்டம் நடத்துவதாக ம.தி.மு.க. அறிவித்துள்ளது. இது குறித்து மத்தியப் பிரதேச முதலமைச்சர் சிவராஜ்சிங் சவகானுக்கு நான் விளக்கமாக கடிதம் எழுதி அதில் இலங்கை ஜனாதிபதியின் வருகையை இரத்துச் செய்யுமாறு கோரிக்கை விடுத்தேன்.

பா.ஜ.கட்சியின் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் விதிஷா நாடாளுமன்ற உறுப்பினருமான சுஷ்மா சுவராஜ் கொழும்பில் ஜனாதிபதி மஹிந்தவை சந்தித்து கடந்த முதலாம் திகதி டில்லி இலங்கைத் தூதரகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சாஞ்சி புத்தமத விழாவில் ராஜபக்ஷ பங்கேற்க இருப்பதை முதன்முதலாக அறிவித்தார்.

தமிழகத்தில் இதற்கு எதிர்ப்பு எழுந்த உடன்தான் அழைப்பு விடுக்கவில்லை என்கிறார். அப்படியானால் அழைத்து யார்? மத்தியில் ஆளும் காங்கிரஸ் தலைமையிலான மன்மோகன்சிங் அரசுதான் பின்னணியில் சதித்திட்டம் வகுக்கிறது. அதற்கு மத்திய பிரதேச அரசு உடந்தையாக செயற்படுகின்றது.

இந்நிலையில் புத்தமத அமைப்பு என்ற பெயரில் ஜனாதிபதிக்கு எதிராக அறப்போர் நடத்துவதைத் தாங்கள் கண்டிப்பதாகவும் எதிர்ப்பதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

மத்திய அரசினுடைய உளவுத்துறை இதன் பின்னணியில் சதித்திட்டம் வகுப்பது தெரிகிறது. இந்தியாவில் ராஜபக்ஷவுக்கு பெரும் வரவேற்பு என்றும் எதிர்ப்பே கிடையாது என்றும் வெளி உலகத்திற்கு காட்டுவதற்காக மத்திய அரசு சிலரைத் தூண்டிவிட்டு சதிவேலையில் ஈடுபட்டுள்ளது.

எங்கள் போராட்டம் புத்தமதத்திற்கு எதிரானது அல்ல. புத்தரின் கொள்கைகளுக்கு நேர் விரோதமாக அரச பயங்கரவாதத்தை நடத்திய ஒருவர் புத்தர் விழாவில் பங்கேற்பதற்கு எதிர்ப்புக் காட்டவே எங்கள் அறப்போராட்டம். திட்டமிட்டபடி அறப்போராட்டம் அமைதி வழியில் நடைபெறும் என்று வைகோ அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ-2)

# வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

திஸ்ஸமஹராம பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் பலியாகியுள்ளதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

திஸ்ஸமஹராம பகுதியில் அதீத வேகத்தில் சென்ற ஜீப் ரக வாகனமொன்று பாதையைவிட்டு விலகி மரத்துடன் மோதியதிலேயே மேற்படி விபத்துச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# த.தே. கூட்டமைப்பின் கோட்பாடுகளை கிழக்கு மாகாண மக்கள் ஏற்கவில்லை

## ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியின் இனவாத கோட்பாடுகளை கிழக்கு வாழ் மக்கள் நிராகரித்துள்ளதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஒமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

தமிழ் இனவாதம், பிரிவினைவாதம் மற்றும் தமிழர் தியாக பூமி ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரசாரம் மேற்கொண்டது.

இனவாத கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கிழக்கு மக்கள் நிராகரித்துள்ளனர்.

பெரும்பான்மை சிங்கள மக்களின் வரிப்பணம் மற்றும் வெளிநாட்டுக் கடன்களின் மூலம் கிடைக்கப் பெற்ற பணத்தை அரசாங்கம் கிழக்கு அபிவிருத்திக்காகப் பயன்படுத்தி வருகின்றது.

இதன் மூலம் அரசாங்கம் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றது.

பெரும்பான்மை சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களை விடவும் கிழக்கு மாகாணத்தில் அரசாங்கம் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. சம்பந்தன் தலைமையிலான இனவாத பிரசாரத்திற்கு துணை போகாமல் மக்கள் தேசிய ஒற்றுமையை கருத்திற் கொண்டு வாக்களித்துள்ளனர்.

ஆளும் கட்சிக்கு சாதகமான சூழ்நிலையில் தேர்தல் நடைபெறவில்லை. வரட்சி, மின்வெட்டு, கல்வித்துறை பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலேயே தேர்தல் நடைபெற்றது.

எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்களை பொருட்படுத்தாது ஆளும் கட்சிக்கு மக்கள் நம்பிக்கையுடன் வாக்களித்துள்ளனர் என்றார். (அ-2)

# ஐ.தே.கவின் வாக்குப்பலம் இனி விஸ்வரூபம் எடுக்கும்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் கூறுகிறார்

(கொழும்பு)

அரசாங்கத்தின் வாக்குப் பலம் வீழ்ச்சியடைந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியின் வாக்குப் பலத்தை சிதறடிக்கும் முதல் கட்ட நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் இந்தப் பலம் விஸ்வரூபமெடுக்கும்.

பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவாக வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்காளர் எண்ணிக்கை இந்த மாகாண சபைத் தேர்தலில் அதிகரித்துள்ளது. இந்த அரசாங்கம் மக்கள் உரிமைகளை முடக்கி வருகின்றது.

கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் மக்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை அரசாங்கம் குறைத்து வருகின்றது. தங்களது மடிகளை நிரப்பி நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் எமக்கு வாக்களித்த அனைவரினதும் பங்களிப்பு பாராட்டுக்குரியது என்றார். (அ-2)

# 25 ஆவது ஆண்டு நிறைவில் குழாய்க்கிணறு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

சம்பத் வங்கியின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யா/மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் புதிய குழாய்க்கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இவ்வித்தியாசாலையினுள் அமைக்கப்பட்டுள்ள கிணற்று நீர் கோடை காலத்தில் வற்றிவிடுகின்ற அபாய சூழ்நிலை இருந்து வருகின்றது.

இக்குழாய் கிணறு அமைக்கப்பட்டுள்ளதன் பின் கோடைகாலத்தில் ஏற்படும் நீர்ப்பற்றாக்குறைப் பிரச்சினை தீர்ந்துவிடும் என பாடசாலைச் சமூகம் நம்பிக்கையுடன் உறுதியளிக்கின்றது. (அ-9)

HDFC
GOLD LOAN
பொற் கடன்



உங்களது வீடமைப்பு வங்கியிடமிருந்து
பெறுமதி மிக்க தங்கத்தைக் கொண்டு

- அதி கூடிய தொகைப் பணம் குறைந்த வட்டியுடன்
- அதி உயர் பாதுகாப்பு
- தங்க ஆபரணங்கள் நவீன தொழில்நுட்ப முறையினால் பரிசீலிக்கப்படல்
- உத்தரவாதமளிக்கப்பட்ட நம்பிக்கை
- நம்பகமானதும் நட்புறவுமான வாடிக்கையாளர் சேவை

*நிபந்தனைகளுக்குட்பட்டது

பாதுகாப்பு பெட்டக வசதி யாழ் கிளையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு
011 5737373
011 2356800
அல்லது அண்மையில் உள்ள HDFC வங்கிக் கிளையை நாடுங்கள்

HDFC BANK
www.hdfc.lk Email: hdfc@hdfc.lk
Fitch Rating - BBB+(lka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

39




செங்கை ஆழியான்

...இந்நிலையில் மலையராஜாவான முன்னைய சேனாதிபதியின் மேல் மொகாலானனுக்கு சில ஐயப்பாடுகள் ஏற்பட்டன. அவன் தனது முன்னைய எஜமானுக்குப் புரிந்த துரோகத்தையும் நினைவுபடுத்திய மன்னன், மலையராஜாவின் கால்களையும் கரங்களையும் வெட்டிவிடுமாறு கட்டளை பிறப்பித்தான். இதனை முன்கூட்டியே அறிந்த மலையராஜன் மகனாகிய வாட்படைத் தளபதி, தனது மகனை அழைத்துக் கொண்டு உருகுணைக்குத் தன் ஆட்களுடன் தப்பி ஒடி, விரைவில் உருகுணையில் ஆட்சியாளனாகத் தன்னை பிரகடனப் படுத்திக் கொண்டான். அவன் உருகுணையில் கரந்துறைந்த சங்கதீசனின் மகன் ஜெத்ததீசவுடன் நட்புப் பாராட்டி, படைதிரட்டிக் கொண்டு தொல்கா பர்வதத்தருகில் பாசறை அமைத்தான். அதனைக் கேள்வியுற்ற மொகாலானன், தனது படையுடன் அவனை எதிர்கொள்ள வந்தான். துரதிஷ்டவசமாக மன்னனின் படையினரில் பெரும்பாலோர் காட்டுநோய் ஒன்றிற்குப் பலியாகினர். அதனை அறிந்த உருகுணைத் தலைவன், மொகாலானனின் படையைத்தாக்கி அழித்தான். பலவீனமுற்றிருந்த படை பின்வாங்கி ஒடியது. மன்னனும் அவன் ஆட்களும் அவன்பின் ஓடின. சிகிரியாவில் அவர்களை மடக்கிய உருகுணைத் தலைவன், மன்னனையும் அவனது பரிவாரங்களையும் தலைகளைக் கொய்து அழித்தான். அவர்களோடு ஜெத்ததீசனையும் கொன்றுவிட முடிவு செய்தான். ஆனால், அவன் அருகில் இல்லை. ஒரு தூதுவன் மூலம், இங்குவந்து இந்த அரசுரிமையை ஏற்றுக்கொள் எனச் செய்தி அனுப்பினான். சந்தேகமுற்ற ஜெத்ததீசன், இவ்வளவு "கஷ்டப்பட்டு இழப்புகளுடன் கைப்பற்றிய அனுராதபுர அரசினை இவ்வளவு இலகுவாக எனக்குத் தாரைவார்க்க விரும்புகிறானெனில் ஐயமுள்ளது" என எண்ணி மலைநாட்டிற்குத் தப்பிச் சென்றான்.

### சீலமேகவண்ணன்

உருகுணைத் தலைவன், முன்னாள் சங்கதீச மன்னனின் சேனாதிபதியின் மகன், தன் பெரும் படையுடன் அனுராத புரத்திற்குள் நுழைந்தான். சீலமேகவண்ணன் என்ற சிம்மாசனப் பெயரோடு அரசகட்டிலமர்ந்தான். இலங்கைத்தீவு முழுவதும் தன் ஆதிக்கத்தினை நிறுவிக் கொண்டான். சமயப்பணிகள் பலவற்றினை ஆற்றினான்.



ஸ்ரீசங்க போதி மன்னன் காலத்து நாணயம்

இவனது ஆட்சியின்போது, ஜெத்ததீசனின் மாமனும் தளபதியுமான ஸ்ரீநாகன் என்பவன், இந்தியாவுக்கு ஓடிச்சென்று, தமிழர்படை ஒன்றினைத் திரட்டிக்கொண்டு, வடக்கே உத்தரதேசத்தில் பாசறை அமைத்தான். இதனை அறிந்த சீலமேகவண்ணன் பெரும் சேனையுடன் சென்று ராஜமித்தி என்ற இடத்தில் போரிட்டு ஸ்ரீநாகனையும் அவனது நெருங்கியவர்களையும் கொன்று யுத்தகளத்தில் கொல்லப்படாத எஞ்சிய தமிழர்களைச் சிறைப்பிடித்து வந்தான். மிகவும் கொடூரமாக அவர்களைச் சித்திரவதை செய்தபின்னர், விகாரைகளுக்குச் சேவைசெய்ய அடிமைகளாக அனுப்பி வைத்தான்.

அபயகிரி விகாரையில் ஒழுக்கமின்றிப் பல பிக்குகள் செயற்படுவதைக் கண்ட, போதி என்ற இளம்தேரர் மன்னனிடம் வந்து முறையிட்டார். அவ்வாறானவர்களை நீக்கிவிடுகின்ற அதிகாரத்தை மன்னன் போதி தேரருக்கு வழங்கினான். அதன் பயனாக பல பிக்குகள் சங்கத்திலிருந்து நீக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் ஒன்றுகூடி, போதி தேரரை இரகசியமாகக் கொலைசெய்து சடலத்தை மறைத்து விட்டனர். இதனை அறிந்த சீலமேகவண்ணன், கோபமுற்று அப்பிக்குகள் அனைவரதும் கரங்களைத் துண்டிக்க கட்டளை பிறப்பித்தான். அத்தோடு அவர்களை நீராடும் குளங்களின் காவலர்களாக நியமித்தான். இவர்களைவிட வேறு நூற்றளவிலான பிக்குகள் தம்மைக் காத்துக்கொள்ள இந்தியாவிற்குத் தப்பியோடினர். அதன்பின்னர் மன்னனின் அழைப்பினை ஏற்று சமய விழாக்களில் கலந்துகொள்ளப் பிக்குகள் மறுப்புத் தெரிவித்தனர். திடீரென ஏற்பட்ட நோய் காரணமாக, தனது ஆட்சியின் ஒன்பதாவது வருடத்தில் சீலமேகவண்ணன் மரணமடைந்தான்.

### அக்கபோதி III


அவனின் மரணத்தின் பின்னர் அவனது மகனாகிய அக்கபோதி (III) (கி.பி. 633- கி.பி. 643) ஸ்ரீசங்கபோதி என்ற சிம்மாசனப் பெயரோடு அரசனானான். அவன் தனது இளைய சகோதரனான மானா என்பவனை உபராஜாவாக்கி தக்கிணதேசத்தின் தலைவனாக்கினான். மலைய நாட்டிலிருந்த ஜெத்ததீசன், மக்களின் ஒரு பகுதியினரைத் தமது பக்கமாக்கி, இலங்கையின் தென் பிராந்தியத்தையும் கிழக்குப் பிராந்தியத்தையும் தனது ஆதிக்கத்தினுள் கொண்டு வந்தான். பின்னர் தலைநகரை நோக்கித் தனது படையுடன் முன்னேறினான். அதற்கு முதல் தனது அமைச்சனான தத்தாசிவன் என்பவனை இலங்கையின் மேற்குப்பகுதியை ஆக்கிரமிக்குமாறு அனுப்பினான். ஜெத்ததீசன், ஸ்ரீபித்திக் கிராமத்தில் பாசறை அமைத்திருந்தபோது, அதனைக் கேள்வியுற்ற அக்கபோதி மன்னன், யுவராஜாவான மானாவை மேற்குப் பிராந்தியப் படையை முறியடிக்குமாறு அனுப்பினான். மானா, தத்தாசிவனுடன் போரிட்டான். ஆனால், தோல்வியே கிட்டியது. அதனால் அக்கபோதி தனது படைகொண்டு ஜெத்ததீசனுடன் போரிட்டு, தோல்வியுற்று, இந்தியாவுக்குத் தப்பி ஓடினான். ஜெத்ததீசனும் தத்தாசிவனும் அனுராதபுரத்தைக் கைப்பற்றினர்.

(தொடரும்)

## அக்கபோதி மன்னர்கள்



பழைய மன்னர்காலத்து நீர்ப்பான கட்டுமானம்-சிதைவடைந்த நிலையில்



தம்புள்ள- குகைக்கோவில்கள் (பழைய மன்னர்காலத்துக்குரியவை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒன்றிணைவு தென்னிலங்கையை ஆட்டம் காண வைக்கும்

## சந்தர்ப்பத்தை பயன்படுத்துங்கள்– பைசால்

(கொழும்பு)

தமிழ் பேசும் மக்கள் கிழக்கு மாகாணத்தில் தெளிவான தீர்ப்பை வழங்கியுள்ளனர். இந்த தீர்ப்புக்கு நாம் கௌரவத்தை வழங்க வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்களின் ஒன்றிணைவின் மூலம் கிழக்கு மாகாண சபை நிர்வகிக்கப்பட வேண்டும் என முஸ்லிம் இடதுசாரி முன்னணியின் பொதுச் செயலாளர் பைசால் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரலாற்றில் கிடைத்துள்ள இப்பொன்னான சந்தர்ப்பத்தை முஸ்லிம்– தமிழ் தலைவர்கள் தவற விடக்கூடாது. கடந்த காலங்களில் முஸ்லிம்–தமிழ் தலைவர்களால் புரியப்பட்ட வரலாற்று தவறுகளை இங்கே பெரிதுபடுத்தி அதைக் காரணமாகக் கொண்டு அரசாங்கத்துடன் இணைய முனைவது மிகப்பெரிய சுயநலத்தின் வெளிப்பாடகவே அமையும்.

கடந்த காலங்களில் விட்ட தவறுகளை சீர்தூக்கிப் பார்த்து அந்த அனுபவங்களைப் பாடமாகக் கொண்டு முஸ்லிம்– தமிழ் நல்லுறவுக்கான பலமான அடித்தளம் கட்டி எழுப்பப்படல் வேண்டும். ஒடுக்கப்பட்ட இனங்களின் ஒன்றிணைவே இந்த அரசாங்கத்திற்கு மிகப் பெரிய சவாலாக அமையும்.

தற்போதைய பேரின வாத ஆட்சியில் முஸ்லிம்– தமிழ் தேசிய இனங்கள் சமூக, சமய, கலாசார, பொருளாதார ரீதியாக பாரிய சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றன. இந்த நிலைமைகள் வரலாற்றில் ஒருபொழுதும் இடம்பெற்றது இல்லை.

முஸ்லிம்– தமிழ் மக்கள் ஒன்றிணைவதன் மூலம் ஆட்சி உருவாகுமானால் அது வரலாற்றில் திருப்பு முனையை ஏற்படுத்தும். அதன்மூலம் தென்னிலங்கை அரசு ஆட்டம் காணும்.

முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் மக்களின் ஏகோபித்த எதிர்ப்பின் பிரதிபலனாகவே தனித்து போட்டியிடும் நிலைக்கு தனது முடிவை மாற்றி தனித்து போட்டியிட்டது. முஸ்லிம் மக்கள் சலுகைக்காக வாக்கு வழங்கவில்லை. உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே வாக்களித்துள்ளனர்.

மக்களின் இப் புரட்சிகரமான தீர்மானத்திற்கு தலை வணங்கி செயற்பட வேண்டும் என்றார். (அ–2)

## உருக்குலைந்த நிலையில் சிசுவின் சடலம் மீட்பு

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாக்கும்புர பகுதியில் ஓடையொன்றுக்கு அருகிலுள்ள குப்பை சேகரிக்குமிடத்திலிருந்து உருக்குலைந்த நிலையில் சிசுவொன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சடலம் நேற்றைய தினம் மீட்கப்பட்டதாக பொலிஸாரினால் தெரிவிக்கப்படுகிறது. தாங்கள் இவ்விடத்தில் குப்பைகளைத் தரம் பிரித்துக் கொண்டிருந்தபோது சிசுவின் சடலத்தை கண்டதாகவும் இச்சிசுவின் சடலம் பையொன்றினால் சுற்றப்பட்டிருந்தாகவும் நாவலப்பிட்டி நகர சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் நாவலப்பட்டி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து குறித்த இடத்திற்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் இது தொடர்பான விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (அ–2)

# மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை பொலிஸார் கட்டுப்படுத்த முடியும்

## நீதவான் சிங்கப்புலி தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்கள் கலகத்தில் ஈடுபட்டால் பொலிஸார் அதிகாரத்தைப் பயன்படுத்தி கட்டுப்படுத்த முடியும் என கொழும்பு பிரதான நீதவான் ரஷ்மி சிங்கப்புலி தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறும் காலப்பகுதியில் பல்கலைக்கழக மாணவர்கள் கலகத்தில் ஈடுபட்டால் அதனை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கலகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு நீதிமன்றின் உத்தரவு அவசியமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மாநாடு நடைபெறும் காலத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவித்து பொலிஸார் நீதிமன்றின் உதவியை நாடியிருந்தனர்.

மாணவர்களின் கலக நிலைமைகளை கட்டுப்படுத்த நீதிமன்றின் உத்தரவு அவசியமில்லை என நீதவான் சுட்டிக்காட்டியுள்ளார். (அ–2)

# யாருடன் சேர்ந்து ஆட்சியமைப்பது முடிவற்று முடிந்தது கலந்துரையாடல்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையின் ஆட்சியை பகிர்ந்து கொள்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கு மாகாண சபையில் முதலமைச்சர் பதவியும் மத்திய அரசாங்கத்தில் பல அமைச்சுப் பதவிகளும் வழங்கப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் அடிப்படையில் காங்கிரசின் சார்பில் மட்டக்களப்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஹாபிஸ் அஹமட் நசீர் முதலமைச்சராக தெரிவாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தாம் அரசாங்கத்துடன் இணைந்து மாகாண ஆட்சியில் பங்கேற்பதா? அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைப்பதா? என்பது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்று முன்தினம் கொழும்பில் கூடி ஆராய்ந்தது.

இதன்போது மத்திய அரசாங்கத்தில் உள்ள நன்மைகள் மற்றும் ஏனைய நலன்களை கருத்திற்கொண்டு அரசாங்கத்துடன் இணைந்து கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைப்பதே சிறந்தது என்று பலரும் கருத்துரைத்துள்ளனர்.

எனினும் சிலர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைத்தால் கிழக்கு முஸ்லிம்களுக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் குறித்து விளக்கியுள்ளனர். சர்வதேச மட்டத்தில் கிழக்கு முஸ்லிம்களின் அபிலாசைகளை கொண்டு செல்ல முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் முடிவுகள் எதுவும் இந்தக் கலந்துரையாடல்களின் போது மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கிழக்கு மாகாண சபைக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்களை தம்பக்கம் இழுப்பதற்காக அரசாங்கத்தரப்பு பெருமளவு பணத்தை வழங்க முன்வந்துள்ளதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இதனையடுத்து தமது 11 உறுப்பினர்களையும் பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்துள்ளதாக கூட்டமைப்பு தரப்புகள் தெரிவித்துள்ளன. (அ–2)

# கிழக்கில் ஆட்சி அமைக்க முனைப்புடன் உள்ளோம்

## சுசில் கிழக்கு ஆளுநருக்கு கடிதம்

கிழக்கு மாகாண சபையின் ஆட்சியை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு தமது கூட்டமைப்பு எதிர்பார்த்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த கிழக்கு மாகாண சபை ஆளுநருக்கு கடிதமொன்றின் மூலம் அறிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேர்தல்கள் ஆணையாளரினால் தேர்தல் தொடர்பிலான வர்த்தமானி வெளியிடப்பட்டதன் பின்னர் முதலமைச்சர் பதவிக்கான பெயர் அறிவிக்கப்படும்.

2012 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல் முடிவுகளின் படி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தனிக்கட்சி என்ற வகையில் அதிக ஆசனங்களை பெற்றுக் கொண்டுள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏழு ஆசனங்களையும் தேசிய சுதந்திர முன்னணி ஒரு ஆசனத்தையும் பெற்றுக் கொண்டுள்ளது.

குறித்த இரண்டு கட்சிகளும் அரசாங்கத்தின் பங்காளர் கட்சிகள் எனவும் அவர்கள் மத்திய அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவினர் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ–2)

# பனைசார் உற்பத்தி பொருட்களுக்கு தென்னாபிரிக்காவில் சந்தை வாய்ப்பு


(யாழ்ப்பாணம்)

பனைசார் உற்பத்தி பொருட்களுக்கு தென்னாபிரிக்காவில் சந்தை வாய்ப்பினை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்வதாக தென்னாபிரிக்க குழுவினர் உறுதியளித்துள்ளதாக பனை அபிவிருத்தி சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள தென்னாபிரிக்க குழுவினர் கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிலையத்தினை சென்று பார்வையிட்டதுடன் தொழில்நுட்பம் மற்றும் அறிவுசார்ந்த உற்பத்தி பொருட்களையும் பார்வையிட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் பனை சார் உற்பத்தி உணவுப் பொருட்கள் சித்த மருத்துவ குணாம்சம் கொண்டவை என தென்னாபிரிக்க குழுவினர் தெரிவித்துள்ளதுடன் யாழ்.மாவட்டத்தில் பனைசார் உணவுப்பொருட்கள் தயாரிக்கும் தகவல்களை திரட்டிச் சென்றுள்ளனர்.

அத்துடன் பனை சார் உற்பத்திகளை கொள்வனவு செய்வதுடன் சந்தை வாய்ப்பினை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (அ–9)

இரணைமடு நீர் விநியோக திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தியின் கீழ் புனரமைக்கப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வட மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் ரீட்டா ஒ சுல்லிவர், உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் ராஜேந்திரா உட்பட்ட அதிகாரிகள் அமர்ந்திருப்பதை படங்களில் காணலாம்.

(படங்கள்:– என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்பாண்ட தொழிலை மேம்படுத்த அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மட்பாண்டத் தொழிற்றுறையை நவீனமயப்படுத்தி அதனூடாக துறைசார்ந்தவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

சங்கானையில் அமைந்துள்ள மட்பாண்ட பயிற்சி நிலையத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் குறிப்பிட்ட தொழிற்றுறையை புதிய தொழில் நுட்பத்துடனும் வடிவமைப்புடனும் நவீனப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடினார்.

பயிற்சியாளர்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் தொழில் வாய்ப்பாக மட்டுமல்லாமல் மட்பாண்டக் கலையை மென்மேலும் வளர்த்தெடுப்பதற்காகவும் அதன்மூலம் துறைசார்ந்தோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும்.

அதனூடாக அவர்கள் தமது சொந்த கால்களில் நின்று சுயபொருளாதாரத்தில் முன்னேற முடியும். எமது கட்சியும் அமைச்சும் இத்திட்டத்திற்கு முழுமையான பங்களிப்பை வழங்கவும் தயாராகவுள்ளது. இதற்காக தென் பகுதியிலிருந்து தொழிற்றுறை நிபுணர் அஜித் மோகன் பெரேரா மூல்மாக சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்காக கொழும்பிலிருந்து புதிதாக உபகரணங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இவற்றை பயன்படுத்திக் கொள்வதுடன் தொழிற்றுறையை மென்மேலும் விருத்தி செய்து அதனூடாக உற்பத்தி செய்வதுடன் உற்பத்தி பொருட்களுக்கான சந்தை வரய்ப்பினை கூட்டுறவு அமைப்பினூடாக பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனிடையே அங்கு உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய புனரமைப்பு அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஆராய்ந்தறிந்து கொண்டார். (அ-9)

## வல்லிபுர ஆழ்வார் மஹோற்சவம்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினேழுதினங்கள்திருவிழாநடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பரத்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் 29 ஆம் திகதி சனிக்கிழமை சமுத்திர தீர்த்த திருவிழாவும் மறுநாள் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கேணித்தீர்த்தமும் நடைபெறவுள்ளதாக ஆலய அறங்காவலர்சபை அறிவித்துள்ளது. (அ-9)

# ஆஸி. செல்ல முயன்று கைதான 15 பேரில் 41 பேருக்கு பிணை

நீர்கொழும்பில் அனுமதி வழங்கப்படாத துறையில் இருந்து சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயற்சித்த நிலையில் கைது செய்யப்பட்ட 45 பேரில் 41 பேரை தலா 5 இலட்சம் ரூபா சரீர பிணையில் விடுதலை செய்யுமாறு நீர்கொழும்பு பிரதான நீதவான் அமரசிங்க் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

ஆழ்கடல் மீன்படகை செலுத்திச் சென்ற மாலுமி அவரது உதவியாளர்கள் மூன்று பேருக்கு பிணை வழங்க மறுத்த நீதவான் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்த சந்தேக நபர்கள் உட்பட 45 பேர் கடந்த 10 ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு செல்லவிருந்த பபா என்ற ஆழ்கடல் மீன்பிடி படகும் கைப்பற்றப்பட்டது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர் ஒருவரிடம் தலா 10 இலட்சம் ரூபாவை வழங்க வேண்டும் என கூறி அவர்களை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்து செல்ல முயற்சித்துள்ளனர். சிலர் பாதித் தொகை பணத்தையும் ஒரு முழு தொகையையும் வழங்கியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள் அத்துடன் சிங்களவர்களும் அடங்குகின்றனர். வடகிழக்கு பகுதிகளை சேர்ந்த தமிழர்கள் நீர்கொழும்புக்கு சென்று கடற்கரை வீதி, குடாபாடு உள்ளிட்ட கிராமங்களில் ஒருவாரம் வரை தங்கியிருந்துள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ-2)

# இலங்கையின் முதலாவது உயிரியல் பல்வகைமை பூங்கா

(கொழும்பு)

இலங்கையின் முதலாவது உயிரியல் பல்வகைமை பூங்கா எதிர்வரும் சில மாதங்களில் மக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்படவுள்ளதாக சுற்றாடல் துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பத்தரமுல்ல பாராளுமன்ற கட்டடத்தொகுதிக்கு அருகிலுள்ள எட்டு ஏக்கர் நிலப்பரப்பில் இந்த பூங்கா நிர்மாணிக்கப்படுகின்றது. இந்தப் பூங்காவில் இலங்கைக்கே உரித்தான அரிய வகையான தாவரங்கள் பயிரிடப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

உயிரியல் பல்வகைமையின் முக்கியத்துவத்தை மக்களுக்கு தெரியப்படுத்துவதற்கும் சிங்கராஜவனம் போன்ற இயற்கை எழில் மிகு இடங்களை கொழும்பில் உருவாக்குவதும் இதன் நோக்கமாகும்.

இந்தப் பூங்காவிற்குள் வண்ணத்துப் பூச்சிகளுக்கான வலயமொன்றையும் அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக சுற்றாடல் துறை அமைச்சு குறிப்பிடுகின்றது. (அ-2)

# வாய் சுகாதார தினம் ஒக்டோபர் 31 வரை

வாய்ச்சுகாதார மேம்பாட்டிற்கான காலமாக நேற்று முதல் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதிவரையான காலப்பகுதி சுகாதார அமைச்சினால் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

இலங்கையில் வருடாந்தம் வாய்ப்புற்று நோய் காரணமாக சுமார் ஆயிரத்து 200 பேர் வரையில் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சின் பற்சுகாதார சேவைப்பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜயசுந்தர பண்டார கூறியுள்ளார்.

வருடாந்தம் சுமார் பத்தாயிரம் பேர் வாய்ப் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றமையும் தெரிய வந்துள்ளது.

புகைத்தல் மற்றும் வெற்றிலை பாவனையை தவிர்ப்பதன் மூலம் வாய்புற்று நோய் ஏற்படுவதை தடுக்க முடியும் என சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ-9)

# வலயமட்ட வணிக போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலை மாணவரிடையே நடந்த வலய மட்ட வணிகப்போட்டி முடிவுகள் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**குறுவினாவிடைப்போட்டி**

**தரம் 10**

ஜெ.கஜவதனா (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), பா.சர்மினா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), செ.சாரங்கன் (சாவகச்சேரி இ.க)

**தரம் 11**

கி.தனுசன் (வரணி ம.வி), க.சண்பிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ச.லக்ஸ்விகன் (கைதடி முத்துக்குமாரசாமி ம.வி)

**தரம் 12,13**

பு.நிடோஜினி (வீரசிங்கம் மத்திய கல்லூரி), ஜெ.கஜந்திகா (சாவகச்சேரி இ.க.), செ.ஆன்டானியா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி)

**பேச்சு**

**தரம் 10**

வி.கார்த்திகாயினி (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), அ.தேனுகா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி),கு.மகிழினி (சாவகச்சேரி இ.க.)

**தரம் 11**

உ.குணசுகி (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி),தே.எய்கினி கிரேனா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி),வி.மதுமதி (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி)

**தரம் 12,13**

செ. ஆன்டானியா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), கி.யசோதா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), இ.சுதர்சினி (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)

**கட்டுரை**

**தரம் 10**

இ.அர்ச்சனா (சாவகச்சேரி இ.க.), ஜெ.வினுஜா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), ஸ்ரீ.தனுசா (உசன் இராமநாதன் ம.வி)

**தரம் 11**

சு.திவோதயன் (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி),உ.குணசுகி (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), ஆ.டக்சாயினி சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

**தரம் 12,13**

த.தக்ஜனா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), சி.சஞ்சயா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), த.துஜீவா (சாவகச்சேரி இ.க.).


(அ-3-29)

## பாதபூஜை நிகழ்வு

(யாழ்ப்பாண்ம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை ஸ்ரீ அம்மா பகவான் பாதபூஜை நிகழ்வு நடைபெறவுள்ளதாக ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்கம் அறிவித்துள்ளது. (அ-9)





பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் 58 ஆவது மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பமானது. இம் மாநாட்டின் போது.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை அச்சுறுத்தும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையுடனான பிணக்குகள்

ஐரோப்பா, ஆசியாவை மையப்படுத்தியிருந்த இலங்கையின் இராஜதந்திர முனைப்புகள் இப்போது ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா நோக்கித் திரும்பியுள்ளது. இதன் ஒரு கட்டமாக, ஆபிரிக்காவிலுள்ள புர்கினாபாசொ, கமரூன், கேப்வேட, மத்திய ஆபிரிக்க குடியரசு, சாட், ஐவரிகோஸ்ட், டிஜிபோடி, ஈக்வடோரியல் கினியா, காபோன், சாம்பியா, மலாவி, மொரிடானியா, நைகர், சியராலியோன், டோகா ஆகிய 15 நாடுகளுடன் இலங்கை புதிதாக இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தவுள்ளது. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை முற்றாக மீளாய்வு செய்யப்பட்டதை அடுத்தே, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான செசெல்ஸ் ஜனாதிபதி ஜேம்ஸ் அலிக்ஸ் மிக்கேல் கடந்த வாரம் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். இரண்டு மாதங்களுக்கு முன்னர் செசெல்ஸ் வெளிவிவகார அமைச்சர் ஜீன் போல் அடம் கொழும்புக்கு வந்திருந்தார். அதேபோல சுவாசிலாந்து மன்னரும் அண்மையில் கொழும்புக்கு வந்திருந்தார். அதே வேளை நைஜீரியா விரைவில் கொழும்பில் ஒரு தூதரகத்தை திறக்கவுள்ளது. இலங்கைக்கான நைஜீரியாவின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஒயே போலா குகு அண்மையில் கொழும்பு வந்து, வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளை சந்தித்து தூதரகத்தை அமைப்பதற்கான இடம் குறித்து ஆராய்ந்திருந்தார். 160 மில்லியன் மக்களையும், பலமான பொருளாதாரத்தையும் கொண்ட நைஜீரியத் தலைநகர் அபுஜாவில் இலங்கை இந்த ஆண்டில் தூதரகத்தை நிறுவவுள்ளது. தென்னாபிரிக்க உயர்மட்டக் குழுவும் கூட அண்மையில் கொழும்பு வந்திருக்கிறது. இவ்வாறாக, ஆபிரிக்க நாடுகளுடன் நெருக்கத்தை ஏற்படுத்தும் நகர்வுகளை இலங்கை தீவிரப்படுத்தியுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்னதாக 15 ஆபிரிக்க நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு அனுமதிகோரும் பத்திரத்தை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அமைச்சரவையில் சமர்ப்பித்து அனுமதி பெற்றிருந்தார். திடீரென ஆபிரிக்க நாடுகளுடனான உறவகளை இலங்கைவலுப்படுத்த ஆரம்பித்துள்ளது. அபிரிக்க நாடுகளின் பக்கம் மட்டுமன்றி, இலத்தீன் அமெரிக்க நடுகளின் பக்கமும்தான் இலங்கை சாயத்தொடங்கியுள்ளது. 13 இலத்தீன் அமெரிக்க நாடுகளுடன் இலங்கை அரசாங்கம் புதிதாக இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்கு அண்மையில் அமைச்சரவை அனுமதி அளித்திருந்தது. கௌதமாலா, பெலிஸ், நிக்கரகுவா, பார்படோஸ், கிரெனெடா, சென், கிட்ஸ்அன்ட் நெவிஸ், சென்வின் சென்ட் அன்கிரெனடின்ஸ், சூரினாம், ஹொண்டூராஸ், அன்டிகுவா அன் பர்புடா, மொமினிக்கா, ஹெய்டி, சென். லூசியா ஆகிய நாடுகளுடனேயே இலங்கை அரசாங்கம் புதிதாக இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தவுள்ளது.

இலத்தீன் அமெரிக்காவில் உள்ள 33 நாடுகள் ஐ.நா.வில் அங்கம் வகிக்கின்றன. இவற்றில் 20 நாடுகளுடன் இலங்கை இராஜதந்திர உறவுகளை வைத்துள்ளது. ஆபிரிக்காவில் மொத்தம் 54 நாடுகள் உள்ளன. அவற்றில் இரண்டு நாடுகளில்தான் இலங்கைத் தூதரகம் இருந்துவந்தது. இப்போது மேலும் பதினைந்து நாடுகளுடன் இராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்தவுள்ளது. திடீரென ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா பக்கம் இலங்கை சாய்வதற்கு பொருளாதார அல்லது வர்த்தக காரணம் ஏதுமில்லை; எல்லாமே அரசியல் காரணம் தான்.

இலத்தீன்அமெரிக்காவில் 33, ஆபிரிக்காவில் 54 என மொத்தம் 87 நாடுகள் என்பது ஐ.நா.வில் சாதாரண எண்ணிக்கையல்ல. ஐ.நா.விலுள்ள சுமார் 194 உறுப்பு நாடுகளில், 87 நாடுகள் இந்தப் பிராந்தியங்களைச் சேர்ந்தவை. சர்வதேச அரங்கில் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே, இந்த நாடுகளுடனான பிணைப்பை இலங்கை வலுப்படுத்தத் தொடங்கியுள்ளது. இலங்கையின் வெளிவிவகார கொள்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களின் முதற்படிதான் ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்காவை நோக்கிய இந்த அசைவு. இந்த மாற்றம் கடந்த மார்ச்மாதம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் தான் தொடங்கப்பட்டது. ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, அதற்கு ஆதரவாக இலங்கையால் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குகள் வெறும் 15 மட்டும்தான். 47 நாடுகளைக்கொண்ட ஐ.நா.மனித உரிமை பேரவையில் 24 வாக்குகள் தீர்மானத்திற்கு ஆதரவாக கிடைத்தன. தலைகீழாக நின்றபோதும் இலங்கையால் இந்த [illegible] முடியவில்லை. [illegible] இலங்கைக்கு சார்பான நிலையை உருவாக்க முடியாது போனதுதான்.

இலங்கை ஒரு காலத்தில் மேற்கு நாடுகளின் தயவில் தங்கிநின்றது. அமெரிக்கா, பிரித்தானியா, இத்தாலி, போன்ற மேற்கு நாடுகள் இலங்கைக்கு தாராளமாக உதவிகளை வழங்கின. போருக்கான ஆயுதங்களை அள்ளி அள்ளிக் கொடுத்தன. பின்னர் அது ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் பக்கம் சாய்ந்து கொண்டது. இப்போது இலங்கை பிரதானமாக சீனாவையும் அதற்கடுத்து ரஷ்யா,பாகிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளையும் சார்ந்து நிற்கிறது. இலங்கைக்கு மேற்கு நாடுகள் இப்போது வேண்டப்படாத நாடுகளாக உள்ளன. மேற்கு நாடுகளுடன் உறவுகளை வைத்துக் கொள்வதால் ஒன்றும் சாதிக்க முடியாது என்ற கட்டத்தில் இலங்கை இப்போது ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா, ஆசிய நாடுகளின் பக்கம் திரும்பியுள்ளது. ஆபிரிக்காவுக்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 13 ஆசனங்கள் உள்ளன. இலத்தீன் அமெரிக்காவுக்கு 8 ஆசனங்கள் உள்ளன. ஆசியாவுக்கு 13 ஆசனங்கள் உள்ளன. கிழக்கு மற்றும் மேற்கு ஐரோப்பாவுக்கு 6 மற்றும் 7ஆசனங்கள்தான் உள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையுடனான பிணக்குகள் இப்போதைக்கு தீரப்போவதில்லை. ஏனென்றால், போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக் கூறும் விவகாரம் உடனடியாகத் தீர்க்கப்படக்கூடிய பிரச்சினை அல்ல. பல நாடுகளில், பல தசாப்பதங்கள் கழிந்தும்கூட போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக் கூறவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. எனவே, இலங்கையில் மூன்றாண்டுகளுக்கு முன்னர் நடந்த போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக் கூறுவதற்கான அழுத்தங்கள் தற்போது இருந்தாலும் கூட அது செயல்வடிவம் பெறுவதற்கு பலகாலம் செல்லும். எனவே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையுடனான உறவுகள் சீராக வாய்ப்புகள் குறைவு. இதனால் தான், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தனக்கான பாதுகாப்பு வளையம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் இலங்கை இறங்கியுள்ளது.

ஐ.நா.பாதுகாப்பு சபையில் இலங்கைக்கு பேதியளவு பாதுகாப்பு உள்ளது. அங்கு சீனாவும் ரஷ்யாவும் இலங்கைக்கு எதிரான எந்த நகர்வையும் தடுத்துவிடும். அவற்றுக்குள்ள வீட்டோ அதிகாரங்களை மீறி மேற்குலகினால், எதுவும் செய்யமுடியாது. ஆனால், ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் நிலைமை அவ்வாறில்லை. அங்கு வீட்டோ அதிகாரம் யாருக்கும் கிடையாது. உறுப்பினராக இருக்கும் 47 நாடுகளில் பெரும்பான்மையானவற்றின் கருத்துக்களே கணக்கில் எடுக்கப்படும். அங்கு மேற்கு நாடுகளின் செல்வாக்குத் தான் அதிகம். அதனால்தான், அமெரிக்கா சுலபமாக அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியது. இலங்கை கடுமையாக முயன்றும் தோல்வியடைந்தது. ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் நவம்பர் மாதம் வரப்போகின்ற மீளாய்வுக் கூட்டம், அடுத்த ஆண்டு மார்ச்மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை தொடர்பான அறிக்கை என்பன இலங்கை அச்சம்கொள்ளவேண்டிய விடயங்களாக உள்ளன. இத்தகைய கட்டத்தில் அடுத்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் எதிர்பார்ப்பை இலங்கை பூர்த்தி செய்யாதுபோனால், அடுத்து என்னவாகும் என்ற கேள்வியும் இருக்கின்றது. இதனால், ஜெனிவாவில் இலங்கையை காப்பாற்றுவதற்கான ஒரு வளையத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது. இது கடந்த மார்ச்மாதம் வெகுவாக உணரப்பட்டது. இந்த நிலையில்தான் அபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா பக்கம் இலங்கை நகர்ந்துள்ளது.




ஆபிரிக்காவில் இலங்கை உறவு வைத்துக்கொள்ளப்போகும் சில நாடுகளில் ஐந்தாறு இலட்சம் பேர் தான் சனத்தொகை. இந்த நாடுகளின் மூலம் இலங்கைக்கு பொருளாதார, வர்த்தக நலன்கள் ஒன்றும் கிடைத்துவிடாது. ஆனாலும் இலங்கை அந்த நாடுகளுடன் உறவுகளை ஏற்படுத்தப்போகிறது. இதற்கெல்லாம் ஒரேகாரணம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவைதான். ஐ.நா.மனித உரிமைகள் பேரவையென்பது அரசாங்கத்தின் நிம்மதியைக் கெடுக்கும் ஒன்றாகவே இருந்துவருகிறது. அதனைச் சமாளிக்கும் வகையில்தான் இந்த புதிய இராஜதந்திர வழிமுறை. இது எந்தளவுக்குக் கைகொடுக்கும் என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

தொல்காப்பியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத கடத்தலில் ஈடுபட்ட கடத்தல் குழுவின் தலைவர் கைது

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கு இலங்கையர்களை சட்டவிரோத அகதிகளாக அழைத்துச் செல்லும் கடத்தல் தலைவர் என்று கூறப்படும் டோனி மலேசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதாகியதாக குறிப்பிடப்படுகிறது.

இந்த் நிலையில் அவர் இலங்கை அகதிகளிடம் இருந்து 40 மில்லியன் டொலர்களை சேகரித்துள்ளதாக நியூ ஸ்ரெய்ட்ஸ் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட அவர் ஏனைய ஆட்கடத்தல்காரர்களுடன் தற்போது கோலாலம்பூர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டு தடுப்பில் வைக்கப்பட்டுள்ள கடத்தல்காரர்கள் மலேசியாவில் இருந்து வெளியேறி அவுஸ்திரேலியாவுக்கு செல்ல சுமார் 300 மில்லியன் டொலர்களை அகதிகளிடம் இருந்து சேகரித்துள்ளதாகவும் செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை, ஈராக், இந்தியா, பாகிஸ்தான், ஈரான், சீனா போன்ற நாடுகளின் அகதிகளுக்கு மலேசியா இடைத்தளமாக கருதப்படுகிறது.

இந்நிலையில் அகதிகளை மலேசியாவுக்கு அழைத்து வந்து பின்னர் அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்ல சுமார் 18 வாரங்கள் எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# முல்லைத்தீவில் ஆயுதங்கள் மீட்பு



விடுதலைப் புலிகளினால் முல்லைத்தீவு பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடி பொருட்கள், ரவைகள் உள்ளிட்ட ஆயுதங்கள் சிலவற்றை கடற்படையினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மீட்டுள்ளனர். கிழக்கிற்கு பொறுப்பான கடற்படை முகாமின் கடற்படையினர் குழுவினர் இந்த ஆயுதங்களை மீட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் மக்களை மீளக்குடியமர்த்த முன்னர் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக சோதனை நடத்தப்பட்டு வருவதாகவும் இதன்போதே இந்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# நிர்மாணிக்கப்பட்ட உர களஞ்சியம் இதுவரை திறந்து வைக்கப்படவில்லை

(புளியம்பொக்கணை)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் வடக்கின் துரித மீள்ச்சித்திட்டத்தின் கீழ் புளியம்பொக்கணை உரக்களஞ்சியமும் அதனோடு இணைந்த கமநலசேவை நிலையமும் புனரமைக்கப்பட்டு பல மாதங்களாகியும் திறந்து வைக்கப்படாமையால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேற்குறித்த நிலையம் வேறு இடத்தில் தற்போது இயங்கி வருகின்றது. இதனால் 2012, 2013 கால போக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கண்டாவளை பிரதேச விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

கண்டாவளை பிரதேசத்தில் ஒரு உர களஞ்சியமும் அதனோடு இணைந்த கமநல சேவை நிலையமும் உள்ளது.

எனவே, உரிய தரப்பினர் இதனை கருத்திற்கொண்டு மேற்குறித்த நிலையத்தை திறந்து உதவுமாறு அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-263)

# மின்சார சேமிப்பு திட்டத்தில் 443 கோடி ரூபா சேமிப்பு

## மின்சக்தி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாளைய தினத்திற்காக இன்று மின்சாரத்தை சேமிப்போம் வேலைத் திட்டத்திற்கு 19 இலட்சம் மின் பாவனையாளர்கள் தமது ஆதரவை வழங்கியுள்ளதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் மூலமாக கடந்த மூன்று மாத காலப்பகுதிக்குள் 84 ஜிகாவோட் மின்சாரம் சேமிக்கப்பட்டுள்ளதாக அவ் அமைச்சு தெரிவித்துள்ளது. இதன் மூலமாக 443 கோடி ரூபா சேமிக்கப்பட்டுள்ளதாகவும் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இவ்வேலைத்திட்டம் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ-2)


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

# VACANCIES

Applications are invited by me up to 12 th October, 2012 from suitably qualified applicants for the following posts:

**1.POST OF WORKS ENGINEER (CIVIL) GRADE II**

**QUALIFICATIONS:**

(A)should possess a B.sc Engineering Degree specializing in civil Engineering from a recognized University/ Higer Educational Institution or an Associate Member of a recognized Institute of Engineers.

**and**

(B) A minimum of five (05) years of experience in the design construction and maintenance of Buildings, water supplies, drainage, road and electrical installation, should also possess experience in handing contracts as well as managing direct labour.

**Method of Recruitment:** Selection by a structured interview
Applicants who have scored 40% marks or above at the interview are eligible to be considered for selection.

**Salary scale:** U-Ex2 (II) 33, 745-8x645:8x790-45,225/- p.m

**2.UNIVERSITY MEDICAL OFFICER - UMO 1(II)**

The university is looking for a highly motivated individual capable of working as a team member with a group of doctors. Training in counseling will be an added qualification.

**Qualifications:**

Medical Degree of a recognized University with at least 3 years experience as Medical practitioner.

**Note:** One year period of service as Intern Medical Officer will be considered for the required period of experience.

Granting for study leave to the selected candidates to obtain postgraduate qualifications or experi ence according to the requirements of University may be considered, subject to exigencies of service.

salary scale: Rs. 28, 360-10x645: 1x790-35, 600/- p.m

selection By : Interview

**3.PUBLIC HEALTH NURSE - UMT I (II)**

**Qulifications:**

A) Certificate of competence as a nurse recognized by the Sri Lanka a medical council and 12 years experience as a Nurse of which 8 years should be either in Student Health Service or public Service in a recognized Institution.

OR

B) Certificate of competence as a nurse recognized by the Sri Lanka a medical council and 10 years experience as a Nurse and possessing post primary qualifications in any aspects of nursing.

salary scale: Rs.18,360-7x185:9x245-21,860/-p.m.

selection: By Aptitude Test and Interview.

**4. PHARMACIST (LOWER GRADE) U -MT1 (111)**

**Qualifications:**

Certificate of competence as a qualified pharmacist recognized by the Sri Lanka Medical council.

salary scale: Rs:16,535-7x 155:10x185-19,470/-p.m.

selection: By Aptitude Test and Interview.

**5. NURSING OFFICER GRADE 11U- MT1 (111)**

**Qualifications:**

A) G.C.E. (Ordinary Level) Examination in six subjects at not more than two sitting with credit passes in three subjects.

B) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council.

Salary Scale : Rs. 16,535-7x155:10x185-19,470/-p.m.

Selection : By Aptitude Test and Interview

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity Payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care.

**NOTE:** In addition to the above salary, the allowances approved by the University Grants Commission will also be paid.

Age limit for all the above posts is not more than 45 years. Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and Statuary bodies.

Applications should be on prescribed forms issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar/ Establishments ( Non-Academic) of this University on a payment of Rs.100/- for each application form at the People's Bank,University of Jaffna Branch or at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money order/ Postal Order to the value of Rs.100/- drawn in favour of the bursar of this University together with self addressed Rs.5/- Stamped envolope of 23X10cm in size.

Applications forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the applications forms downloaded from the University Website should attach a Money order/ Postal Order for Rs.100/- to the applications forms drawn in favour of the Bursar, University of Jaffna.

The envelope containing duly filled application form must bear 'the name of the post applied for' on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the Registrar on or before 12 th October 2012.

Applicants from Government Departments, State Corporations and Statuary Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such apilicant will be considered for appointments if the application routed through the Head of Departments is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date willbe rejected.

REGISTRAR
10.09.2012 (C/1027)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

218

## ஆசையை வென்றவர்கள்



வெகுகாலத்திற்கு முன் பூமியில் பல ஆண்டுகளாக மழையே பெய்யாமல் கடுமையான வறட்சி ஏற்பட்டது. புல்பூண்டுகள் கூட கருகிப்போயின. எங்கும் பசி, பட்டினி, வறுமை, கால்நடைகளும் மனிதர்களும் ஏனைய உயிரினங்களும் மாளத் தொடங்கின. குடிநீர் கூட கிடைக்காமல் மிகவும் வாடி வதங்கினர்.

பஞ்சமானது மகாமுனிவர்களைக் கூட விட்டு வைக்கவில்லை. அவர்களும் காய்கனி ஏதும் கிடைக்காமல் ஒட்டி உலர்ந்து அலைந்தனர். பல இடங்களுக்கு அலைந்து சென்றும் பசியைப் போக்க எதுவும் கிடைக்கவில்லை. காடு, மலைகள் கடந்து ஒருநாட்டின் எல்லையை அடைந்தனர். மகா முனிவர்கள் வருவதைக் கேள்வியுற்ற அந்த நாட்டின் மன்னன் *விருஷாதர்பி* அவர்களை எதிர்கொண்டு வரவேற்று வணங்கினாள். அவர்களிடம் மகா முனிவர்களே! நீங்கள் எங்கும் அலைந்து திரியவேண்டாம். உங்களுக்கு வேண்டிய மட்டும் உணவு, உடை, இருப்பிடம், பொன், பொருள் யாவும் தருகிறேன். தாங்கள் எனது வேண்டுகோளை ஏற்று ஏனது நாட்டில் வாழவேண்டும் என்று கூறினான்.

அதனைக்கேட்ட முனிவர்கள் மன்னா! உனது வேண்டுகோளுக்கு மிகுந்த நன்றி. ஆனால் அரசன், செல்வந்தன் போன்றவர்கள் தரும் பொருள் தேனைப்போல் இனிமையானது. ஆனால் அவற்றை ஏற்றுக்கொள்வது என்பது கொடிய நஞ்சைப்போன்றது. இந்த அறவழியை நாங்கள் மீறவேமாட்டோம்.

துறவிகளாகிய நாங்கள் எவ்வளவு தவத்தைச் சேர்த்து வைக்கிறோமோ அவை அனைத்துமே நன்றாகக் காய்ந்த சருகாகிக்போன காடானது ஒரு சிறிய தீப்பொறி பட்டு விநாடியில் எரிந்து சாம்பலாவதுபோல் அரசனிடம் பெறும் தானத்தால் உடனே அழிந்துவிடும் என்று கூறிவிட்டு அந்த இடத்தை விட்டகன்று வேறு இடம் நோக்கிச் சென்றனர்.

முனிவர்கள் சென்றவுடன் அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தினான். முனிவர்கள் தனது தானத்தை ஏற்றுக்கொள்ளும் வழியை ஆராய்ந்தான். ஒருவகையான பெரிய வடிவம் கொண்ட திரட்சியான அத்திப்பழங்களைக் கொண்டுவரச் செய்தான். ஒவ்வொரு பழத்திற்குள்ளும் ஒரு தங்கக்கட்டியை வைக்கச்செய்தான்.



அவற்றைப் பழக்கூடைகளில் நிரப்பி முனிவர்கள் செல்லும் பாதையில் அவர்கள் செல்வதற்கு முன்பாகவே சென்று போட்டுவிட்டு வருமாறு தனது பணியாளர்களுக்கு ஆணையிட்டான்.

முனிவர்கள் வழியில் அத்திப்பழங்கள் சிதறிக்கிடப்பதைப் கண்டனர். அத்ரி முனிவர் ஒரு பழத்தை எடுத்துப்பார்த்தார். அது மிகவும் கனமாக இருப்பது கண்டு சந்தேகம் கொண்டார். உடனே அவர் ஏனைய முனிவர்களிடம் பசி அதிகமாக இருந்தாலும் நாம் எதற்கும் ஆசைப்படவில்லை. இந்தப்பழங்களுக்குள் பொன் இருக்கும் என்று நினைக்கிறேன். இதனை நாம் எடுத்தால் பெரும் பாவத்திற்கு உள்ளாவோம் என்று கூறினார்.

அதனைக்கேட்ட முனிவர்கள் கனிகள் போடப்பட்ட வழியை விட்டுவிலகி வேறுபாதைவழியாக நடந்தார்கள். அவர்கள் செல்லும் வழியில் வித்தியாசமான தோற்றமுடைய ஒரு முனிவர் நின்றார். அவர் தன்பெயர் ***சுனஸ்சகர்*** என்று அறிமுகப்படுத்திக்கொண்டார். அவர் இருந்த இடத்தின் அருகில் ஒரு பெரிய ஏரி இருந்தது. அதில் அழகிய தாமரை மலர்கள் நிறைந்து காணப்பட்டன.

'மிகுந்த பசியும் களைப்பும் அடைந்த முனிவர்கள் ஏரியின் கரையில் ஓய்வெடுக்க அமர்ந்தனர்.

அப்போது அவர்களுடன் புதிதாகச் சேர்ந்த சுனஸ்சகர் முனிவர்களை நோக்கி பசிப்பிணி பற்றி விளக்கமாகக்கூறுமாறு கேட்டுக் கொண்டார். பசி என்னும் தீயினால் உடலில் உள்ள நாடி நரம்புகள் உலர்ந்து போய்விடும். கண்கள் இருண்டு விடும். ஒன்றும் தோன்றாது. புத்தி மந்தமாகும். பசி என்னும் நெருப்பு கொளுந்துவிட்டு எரியும்போது உயிரினங்கள் செயலற்றுப்போய் விடும். பசி மனிதனை பண்பிழக்க வைக்கும். பயங்கரவாதி ஆக்கும். உணவுதான் உலகில் சிறந்த பொருள். எனவே அன்னதானம் செய்பவர்கள் பெரும் பேற்றினை அடைகிறார்கள். தர்மம், தானம், யாமம் ஆகிய இந்த மூன்றும்தான் முக்கிய தர்மங்களாகும். எல்லா உயிர்களிடத்திலும் எவன் அன்பு செலுத்துகிறானோ அவன் பேரின்பப் பெருவாழ்வை அடைகிறான் என்று முனிவர்கள் கூறினர்.

பின்னர் முனிவர்கள் பசியை ஆற்ற ஏரியில் தாமரைத்தண்டுகளை



எடுத்துவர விரும்பினார்கள். ஆனால் அந்தஏரியில் அரக்கி ஒருத்தி காவல் இருந்தாள். அவள் முனிவர்கள் விருஷாதர்பி மன்னனின் ஈகையை ஏற்க மறுத்ததால் அவர்களைக் கொல்வதற்கு மன்னனால் அனுப்பப்பட்டவள். அவளது பெயர் ***யாதுதானி.*** முனிவர்கள் அவளிடம் அவளைப் பற்றி விசாரித்தனர்.

தவயோகிகளே நான் யாராக இருந்தால் என்ன? நான் இந்த ஏரியின் காவல்காரி என்றாள் அரக்கி. அதற்கு முனிவர்கள் பெண்ணே! நாங்கள் பசியால் மிகவும் வாடுகிறோம். எனவே நீ அனுமதி அளித்தால் இந்த ஏரியிலிருந்து தாமரைத்தண்டுகளை எடுத்துக் கொள்கிறோம் என்றனர்.

அதற்கு யாதுதானி சரி நீங்கள் அவ்விதமே எடுத்துக் கொள்ளலாம். ஆனால் நீங்கள் ஒவ்வொருவராக வந்து அவரவர் பெயரைச் சொல்லி விட்டு ஏரிக்குள் வரவேண்டும் என்றாள். அவளது பதிலைக் கேட்டதும் அத்ரி முனிவருக்கு அவள் ஒரு அரக்கி என்பதும் அவள் தங்களைக் கொன்று தின்பதற்காக வந்திருக்கிறாள் என்பதும் புரிந்துவிட்டது. இருந்தாலும் அவர் தன் பெயரைக்கூறி விளக்கமளித்தார். அரக்கி, அத்ரி முனிவரைப்பார்த்து நீங்கள் இப்போது இறங்கலாம் என்றாள்.

அடுத்து வசிட்டரும் தன்பெயரைக்கூறி விளக்கமளித்தார். அவரையும் போக அனுமதித்தாள். அடுத்து கச்யபர் தன்னைப் பற்றிக் கூறினார். அவரையும் அனுமதித்தாள். இவ்வாறு ஒவ்வொரு முனிவரும் தன்னைப்பற்றிக்கூறி விட்டு ஏரிக்குள் இறங்கினர். ஆனால் அந்த அரக்கியால் யாருடைய பெயரையும் நினைவில் வைத்துக் கொள்ள முடியவில்லை.

கடைசியில் சுனஸ்சகரின் முறை வந்தது. அவர் யாதுதானி இந்த முனிவர்கள் தெரிவித்தபடி விளக்கமாக என் பெயரைக்கூற இயலாது. என்பெயர் சுனஸ்சகர் என்றார். யாதுதானி மீண்டும் அவரது பெயரைக்கேட்டாள். கூற அவர் மறுத்துவிட்டார். அத்துடன் எனது திரிதண்டத்தின் அடியால் எரிந்து சாம்பலாகு என்று கூறிக்கொண்டே சுனஸ்சகர் முனிவர் வேடத்தில் வந்த தேவேந்திரன் தனது வஜ்ராயுதத்தால் தாக்கி அரக்கியைக் கொன்றுவிட்டார்.

பின்னர் முனிவர்களே! நான் துறவியல்ல, இந்திரன். உங்கள் அனைவரையும் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் துறவி வேடத்தில் வந்தேன். விருஷாதர்பி மன்னனால் அனுப்பப்பட்ட கொடூரமான அரக்கி இவள். உங்களைக் கொல்வதற்காகவே ஏவப்பட்டவள். இவள் அக்கினியிலிருந்து தோன்றியவள். இவளைக் கொல்வதற்கே இங்கே வந்தேன். தவயோகிகளே! நீங்கள் எத்தகைய பசிக்கொடுமையிலும் ஆசையை முற்றிலும் ஒழித்துவிட்ட காரணத்தால் எந்தப்பொருளை எவ்வளவு எடுத்தாலும் குறையாமல் இருக்கும் தன்மையை உடைய அட்சய உலகம் அடையும் பெருமையைப் பெற்றுள்ளீர்கள். நீங்கள் அங்கே செல்வீர்களாக என்று இந்திரபகவான் கூறினார். அவர் கூறியபடியே மகாமுனிவர்கள் அட்சய உலகம் அடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏற்பாடு செய்த கைதிகள், காணாமல் போனோர் தொடர்பாக வவுனியா குருமன்காடு காளி கோவிலடியில் நேற்றைய தினம் காலை பிரார்த்தனை மற்றும் அமைதி ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. இதன்போது ஆயிரத்து எட்டு தேங்காய் உடைக்கப்படுவதையும் கண்ணீர் மல்க உறவினர்கள் பிரார்த்தனையில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- பூந்தோட்டச் செய்தியாளர்)

# இரட்டை இலை முகப்புடன் எம்.ஜி.ஆர் சமாதி புதுப்பிப்பு

(கொழும்பு)

மறைந்த தமிழ்நாடு முதல்வர் எம்.ஜி.ஆரின் சமாதி இரட்டை இலை முகப்புடன் புதுப்பிக்கப்படுகின்றது.

அ.தி.மு.க வின் ஆணி வேராக திகழ்ந்த முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி ஆரின் சமாதி சென்னை மெரினா கடற்கரையில் உள்ளது.

இங்கு தினமும் பல்லாயிரக்கணக்கான அ.தி.மு.க. தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

இந்நிலையில் எம்.ஜி.ஆர் மற்றும் அண்ணா சமாதிகள் புதுப்பிக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா சட்டப்பேரவையில் அறிவித்தார்.

அதன்படி முதற்கட்டமாக எம்.ஜி.ஆர் சமாதியில் புதுப்பித்தல் பணிகள் தொடங்கின. இந்நிலையில் எம்.ஜி.ஆர் சமாதியின் முகப்பில் பறக்கும் குதிரை போன்ற வடிவுடன் பிரமாண்டமான இரட்டை இலை சின்னம் அமைக்கப்படுகிறது.

மொத்தம் 3.4 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் இப்பணிகள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி எம்.ஜி. ஆர். நினைவு தினத்தில் முடிக்குமாறு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. (அ-2)

# கரணவாய் பகுதியில் 20 வருடங்களாக வீதிகள் சில புனரமைக்கப்படவில்லை

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(கரவெட்டி)

கரணவாய் பகுதியில் பல வீதிகள் கடந்த 20 வருடங்களாக புனரமைக்கப்படவில்லை என வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் அப்பகுதி மக்களின் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று காலை 10 மணிக்கு ஒருங்கிணைப்பு குழுவின் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது இப்பகுதிகளான அறிவாலயம், சோளங்கன், கலட்டிபிள்ளையார் மண்டான் பகுதியில் உள்ள வீதிகள் கடந்த 20 வருடங்களாக புனரமைக்கப்படாமையால் அப்பகுதி விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் தினம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாகவும்மக்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட மேற்படி வீதிகள் புனரமைக்கப்படாமையால் பிரதேச சபை தம்மை பாரபட்சம் காட்டுவதாகவும் இக்கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதற்கு பதில்ளித்த தவிசாளர் தாம் எவரையும் பாரபட்சம் காட்டுவதில்லை எனவும் தங்களது சபை நிதிமூலம் சில குறிப்பிட்ட தூர வீதிகளையே புனரமைக்க முடியும் எனவும் தெரிவித்தனர். அத்துடன் அரச சார்பற்ற நிறுவனத்தின் உதவியுடனேயே நீண்ட தூர வீதிகளை புனரமைக்க தம்மால் சிபாரிசு செய்ய முடியும் என அவர் சபையில் தெரிவித்தார். (அ-3-24)

# டைனமோ இல்லாத சைக்கிள்கள் மன்னார் பொலிஸாரால் பறிமுதல்

மன்னாரில் டைனமோ இல்லாத துவிச்சக்கரவண்டிகளை மன்னார் பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த வீதிப்போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

குறித்த துவிச்சக்கரவண்டிகளுக்கு புதிய டைனமோவை உடன் கொள்வனவு செய்தவர்களின் துவிச்சக்கரவண்டிகள் உடன் திருப்பி வழங்கப்பட்டன.

சுமார் 50 இற்கும் மேற்பட்ட துவிச்சக்கர வண்டிகள் இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டன.

தற்போது மீட்கப்பட்ட அனைத்து துவிச்சக்கரவண்டிகளும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் புதிய டைன மோவைப் பெற்றுக்கொண்டு வந்து துவிச்சக்கரவண்டிகளை மீட்டுச்செல்லுமாறு வீதிப் போக்குவரத்துப்பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பகுதியில் வாகனங்களின் நெரிசல் தற்போது அதிகரித்த நிலையில் காணப்படுவதனால் இரவு நேரங்களில் வெளிச்சம் இன்றி துவிச்சக்கரவண்டிகளில் பயணிப்பவர்கள் விபத்துக்குள்ளாகின்றனர்.

அதனைத் தடுப்பதற்காகவே குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் வீதிப் போக்குவரத்துப்பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# பனை அபிவிருத்திச் சபை
# PALMYRAH DEVELOPMENT BOARD

**பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு**

MINISTRY OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISES DEVELOPMENT

**கூறுவிலை கோரல்**

எமது சபையின் பாவனைக்கு கீழ் வரும் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டியுள்ளமையால் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து அவற்றிற்கான கூறுவிலை கள் கோரப்படுகின்றன. தங்களின் கூறுவிலைகளை 25.09.2012 இற்கு முன் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். மேலதிக விபரங்களுக்கு "**பனை அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்**" எனும் முகவரியில் அமைந்துள்ள எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

| இல No | பொருள் Equipment | அளவு Specification | எண்ணிக்கை Quantity |
|---|---|---|---|
| 01 | தையல் இயந்திரம் (சிங்கர்) | -- | 2 |
| 02 | தையல் இயந்திரம் (Plue Jet) | -- | 1 |
| 03 | சாயம் காய்ச்சும் பாத்திரம் (தாச்சி அலுமினியம் பெரியது) | 32" | 10 |
| 04 | பிளாஸ்ரிக் வாளி | 20L | 10 |
| 05 | கந்தகப்பெட்டி (அலுவலகத்தில் மாதிரிகள்) | 6'X 3'X 1 1/2' | 2 |
| 06 | ஓலைவாரும் கருவி (அலுவலகத்தில் மாதிரிகள்) | -- | 25 |
| 07 | கத்தரிக்கோல் | 8" | 25 |
| 08 | கத்தரிக்கோல் மரம் வெட்டுவது | -- | 75 |
| 09 | சத்தகம்- உருக்கு, பெரியது, அடிப்பகுதி உருண்டையான கூர் | -- | 100 |
| | உடையது (அலுவலகத்தில் மாதிரிகள்) | -- | 100 |
| 10 | கத்தி உருக்கு, பெரியது (அலுவலகத்தில் மாதிரிகள்) | -- | 75 |
| 11 | கத்தி உருக்கு, சிறியது ( அலுவலகத்தில் மாதிரிகள்) | -- | 75 |
| 12 | பிளாஸ்ரிக் கதிரை | -- | 01 |
| 13 | அலுவலக மேசை | 5X 3X 2.5 | 25 Set |
| 14 | பூச்சுருட்டும் கருவி உருக்கு (அலுவலகத்தில் மாதிரி) | 5X 1 | 02 |
| 15 | Boiling Pan | 24'' diameter | 01 |
| 16 | Boiling Pan | 18'' diameter | 05 |
| 17 | Stainless steel container with Lid | 50 Lit | 05 |
| 18 | Stainless steel container with Lid | 25 Lit | 01 |
| 19 | Settling tank | Large | 03 |
| 20 | Jaggery moul | Made by timber (40 pieces caves) | |
| 21 | Sugar candy box (stainless steel) | 20 Lit | 03 |
| 22 | Hydrometer | Slandered 0-30,30-90 | 02 |
| 23 | Boiling vessel with lid | 50 L,Stainless steel | 01 |
| 24 | Hand held Ph meter | Standard | 01 |
| 25 | Industrial Thermometer | (from Zero)-200⁰C | 01 |
| 26 | Plastic storage can | 5 Lit | 75 |
| 27 | Plastic barrels | 250 Lit | 01 |
| 28 | Plastic buckets | 20 Lit | 10 |
| 29 | Sealer | Three in one (Cork sealer, cordial bottle sealer, jam sealer) | 01 |
| 30 | Power generator | Single base | 01 |
| 31 | Electric oven | Medium | 01 |
| 32 | Kitchen Blender | -- | 01 |
| 33 | Gas cylinder with industrial burner | Gas cyclinder-40Kg industrial burner-3 line | 01 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைக்கோபுர நினைவுதினம்



நியூயோர்க் இரட்டை கோபுர தாக்குதலின் 11 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் மிக எளிமையான முறையில் அனுசரிக்கப்பட்டது.

கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி அமெரிக்காவின் வோஷிங்டனில் இருந்து நான்கு விமானங்களை கடத்திய அல்கொய்தா தற்கொலைப் படை பயங்கரவாதிகள், நியூயோர்க் நகரில் இருந்த உலக வர்த்தக மையம் மற்றும் பென்டகன் இராணுவ தலைமையகத்தின் மீது விமானங்களை மோதச் செய்தனர்.

இதில் உலக வர்த்தக மையமாக செயற்பட்ட இரட்டை கோபுரம் தகர்க்கப்பட்டதுடன் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

இந்தத்துயர சம்பவத்தின் 11 ஆவது ஆண்டு நினைவுதினம் அமெரிக்கா முழுவதும் நேற்று முன்தினம் அனுசரிக்கப்பட்டதுடன் நியூயோர்க் நகரின் கிரவுண்ட் ஜீரோ மற்றும் வோஷிங்டனில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

உறவினர்களைப் பறிகொடுத்தவர்கள் நினைவிடத்தில் மலர் அஞ்சலி செலுத்தினர். நாடு முழுவதும் நடந்த நினைவு நிகழ்ச்சிகளில் அரச அதிகாரிகள் அதிகம் பங்கேற்கவில்லை.

இதேவேளை, வெள்ளை மாளிகையில் நடந்த நிகழ்ச்சியில் சிறிது நேரம் மௌனம் அனுசரிக்கப்பட்டது.

இந்நிலையில் ஜனாதிபதி பராக் ஒபாமா வெள்ளை மாளிகையில் தேசிய பாதுகாப்பு அதிகாரிகளுடன் உள்நாட்டு பாதுகாப்பு குறித்து ஆலோசனையில் ஈடுபட்டார்.

இதன்போது தேசிய பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பை பலப்படுத்துவது குறித்து அதிகாரிகளுடன் ஜனாதிபதி ஒபாமா ஆலோசனை நடத்தினார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் அமெரிக்க மக்களை பாதுகாக்க அனைத்து துறைகளும் பாதுகாப்பு அமைப்புகளும் ஈடுபட வேண்டும் என்று ஜனாதிபதி ஒபாமா கேட்டுக் கொண்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# சிரித்துக்கொண்டே மரண தண்டனை நகலைப்பெற்ற அஜ்மல்கசாப்

மரண தண்டனை விதிக்கப்பட்ட உச்ச நீதிமன்றத்தின் நகலை அஜ்மல் கசாப் சிரித்துக்கொண்டே வாங்கியதாக சிறை அதிகாரிகள் தெரிவித்தனர். மும்பை தாக்குதல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அஜ்மல் கசாப்புக்கு விதிக்கப்பட்ட தூக்குத்தண்டனை சமீபத்தில் உறுதி செய்யப்பட்டது.

இருப்பினும் இந்த தண்டனை உறுதி செய்யப்பட்டது கசாப்புக்கு தெரியாமலே இருந்து வந்தது. இந்நிலையில் உச்ச நீதிமன்றம் மரண தண்டனை விதிக்கப்பட்ட இரண்டு நகலை தயாரித்து ஒன்றை கசாப்புக்கு அனுப்பியது.

அதை சிறை அதிகாரிகள் அவனிடம் கொடுக்க சிரித்துக்கொண்டே அதை வாங்கி கெயெழுத்திட்டுள்ளான்.

இந்த நகல் உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் அஜ்மல் கசாப்பின் பாதுகாப்பு கருதி முட்டை வடிவிலான தனி சிறை அவனுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (அ-2)

# சோமாலியாவில் ஹசன் ஜனாதிபதியானார்

சோமாலியாவில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் அதிக பிரபலமில்லாத ஹசன் முகமது (வயது 56) புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இது குறித்து சோமாலிய தூதர் ஒருவர் கூறுகையில், ஹசன் முகமது சோமாலிய மக்கள் சமுதாயத்திலிருந்து வந்தவர். முஸ்லிம் சகோதரத்துவத்திற்கு சமமான அல் இஸ்லாவுடன் தொடர்புடையவர்.

கடந்த இரு நாட்களாகத்தான் அவரை பற்றி நாங்களே கேள்விப் படுகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியான ஷாிப் ஷேக் அகமது மீண்டும் வெல்வார் என பெரும்பாலானோர் கணித்திருந்த நிலையில் ஹசன் வென்றிருப்பது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. (அ-2)

# பாகிஸ்தானின் மிக மோசமான எதிரி அமெரிக்காதான்

## மருத்துவர் அப்ரிதி பரபரப்பு பேட்டி

பாகிஸ்தானின் மிக மோசமான எதிரி அமெரிக்காதான். கோடிக்கணக்கான பணத்தை உதவியாக பெறவே அமெரிக்காவுடன் ஒத்துழைப்பு போன்று பாகிஸ்தான் போலியாக நாடகமாடுகிறது என பின்லேடனை காட்டிக் கொடுத்த மருத்துவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தானில் பதுங்கியிருந்த தீவிரவாதி ஒசாமா பின்லேடனை கடந்தாண்டு மே மாதம் அமெரிக்க சீல் படையினர் சுட்டுக் கொன்றனர்.

ஷகீல் அப்ரிதி என்ற மருத்துவரே அமெரிக்க படைக்கு பின்லேடன் இருப்பிடம் குறித்து உளவு சொன்னார் என்று குற்றம் சாட்டப்பட்டது. தற்போது அவர் பெஷாவர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவர் அமெரிக்க தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அமெரிக்காவால் கடந்த வாரம் தீவிரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்ட ஹக்கானி அமைப்பு உட்பட பல்வேறு தீவிரவாத அமைப்புக்களை பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. ஆதரிக்கிறது.

என்னிடம் பாகிஸ்தான் அதிகாரிகள் விசாரணை நடத்திய போது பாகிஸ்தானுக்கு அமெரிக்கா நட்பு நாடுதானே. அந்நாட்டில் இருந்து கோடிக்கணக்கான டொலர் நிதியுதவி பெறுகிறீர்களே என்று வாதாடினேன்.

அதற்கு அவர்கள் அமெரிக்கா மோசமான எதிரி நாடு. நீ அந்த நாட்டுக்கு உதவி செய்து விட்டாய் என்று கூறினர். தீவிரவாதத்தை ஒடுக்க நடவடிக்கை எடுப்பதாக பாகிஸ்தான் கூறுவது உண்மையில்லை என்று தெரிவித்துள்ளார்.

இந்த பேட்டி அமெரிக்காவுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. அப்ரிதி கூறியதை பற்றி முதலில் கவனியுங்கள். அதுவரை ஏனைய பணிகளை நிறுத்தி வையுங்கள் என்ற அமெரிக்காவின் செனட் உறுப்பினர் ராண்ட் பால் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# ரஷ்யாவின் மிக வயதான நபர் மரணமானார்

ரஷ்யாவின் மிக வயதான நபர் கடந்த 7 ஆம் திகதி இரவு இறந்துள்ளதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

ரஷ்யாவின் டாகெஸ்தான் பகுதியைச் சேர்ந்த முகமது லபசானோவ் (வயது 122 என்பவரே காலமானார்.)

இவர் கடந்த மேமாதம் தனது 122 ஆவது பிறந்த நாளை கொண்டாடினார்.

இருப்பினும் இவர் பிறந்த ஆண்டுக்கான ஆவணங்கள் ஏதும் இல்லை.

பொதுவாக காகசஸ் மலை பகுதியையொட்டி வசிப்பவர்கள் நீண்ட நாள் வாழ்வதாகக் கூறப்படுகிறது. இந்த வகையில் லபசானோவ் 122 வயது வரை வாழ்ந்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவைச் சேர்ந்த பெசிகூப்பர் என்பவருக்கு தற்போது 116 வயதாகிறது. இவர் தான் உலகின் அதிக வயதான நபர் என கின்னஸ் சாதனை புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# சோனியா, ராகுல் தொகுதிகளுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கப்படுகிறது

## என்ற தகவலால் அதிர்ச்சியில் நீதிமன்றம்

உத்தரப் பிரதேசத்தில் விஐபிக்கள் அடிக்கடி விஜயம் செய்யும் மாநிலங்களுக்கு மட்டும் தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாக வெளியாகியுள்ள தகவல் அதிர்ச்சியளிக்கிறது.

அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் லக்னோ அமர்வு முன்பு உத்தரப்பிரதேச மின்சாரத்துறை மின்தடை அட்டவணையை சமர்ப்பித்தது.

இதில் 6 விஐபி மாவட்டங்களுக்கு மட்டும் தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள தகவலை அறிந்த நீதிமன்றம் அதிர்ச்சி அடைந்தது.

நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவர் தாக்கல் செய்த பொது மனுவில் உத்தர பிரதேசத்தில் 6 விஐபி மாவட்டங்களுக்கு மட்டும் தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் பிற மாவட்டங்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுகின்றன. எனவே இதனை நீக்கி ஏனைய மாவட்டங்களை போல இந்த மாவட்டங்களிலும் மின்தடை நேரம் வகுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இம்மனுவை ஏற்ற நீதிமன்றம் 6 மாவட்டங்களில் மின்தடை நேர அட்டவணையை சமர்ப்பிக்குமாறு கோரியிருந்ததையடுத்து இன்று அம்மாநில மின்சாரத்துறை அட்டவணை சமர்ப்பித்தது.

அந்த அட்டவணையில் கன்ணௌஜ், எடவாஹ், மணிப்பூரி, ராம்புர், அமேதி, ரேபரேலி ஆகிய 6 மாவட்டங்களுக்கும் விஐபிக்கள் அடிக்கடி வந்து போவதால் தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமேதி தொகுதி காங்கிரஸ் பொது செயலாளர் ராகுல் காந்தியின் பிரதான தொகுதியாகும். ரேபரேலி தொகுதி காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் தொகுதியாகும். (அ-2)

# நீர்மட்டத்தை குறைக்கக்கோரி நீரில் இறங்கி மக்கள் போராட்டம்

(சென்னை)

மத்திய பிரதேசத்தில் அணையின் நீர்மட்டத்தை குறைக்கக் கோரி தண்ணீரில் இறங்கி போராடும் மக்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றும் நடவடிக்கை தொடங்கியுள்ளது. மத்திய பிரதேசத்தில் ஹர்டா மாவட்டத்திலுள்ள கர்தனா கிராம மக்கள் அங்குள்ள இந்திரா சாகர் அணையின் நீர்மட்டத்தை 262 மீற்றரிலிருந்து 260 மீற்றராக குறைக்க வலியுறுத்தி வருகின்றனர்.

இந்தக் கோரிக்கையை முன் வைத்து 30 இற்கும் மேற்பட்டோர் கடந்த 14 நாட்களாக கழுத்தளவு தண்ணீரில் இறங்கி ஜல் என்ற போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஆனால், கிராம மக்களின் கோரிக்கை குறித்து மத்திய பிரதேச அரசு நடவடிக்கை ஏதும் எடுக்காத நிலையில் 144 தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

மாநில அரசு 100 இற்கும் அதிகமான அதிரடிப்படையினரை கர்தனா கிராம பகுதியில் குவித்துள்ளது. மேலும் தண்ணீரில் இறங்கி போராடும் மக்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றும் நடவடிக்கையையும் அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

ஓம் கரேஷ்வர் அணையின் நீர்மட்டத்தை குறைக்கக் கோரி ஹன்வா மாவட்டத்தில் இதேபோன்றதொரு போராட்டம் 17 நாட்களாக நீடித்ததையடுத்து ஓம் கரேஷ்வர் அணையின் நீர்மட்டத்தைக் குறைக்க மத்திய பிரதேச அரசு ஒப்புக் கொண்டது.

அதேபோல் தற்போது இந்திரா சாகர் அணையின் நீர்மட்டத்தை குறைக்க அங்குள்ள மக்கள் இவ்வாறு போராடி வருகின்றனர். (அ-2)

# லிபியாவுக்கான அமெ.தூதுவர் பலி



லிபியாவுக்கான அமெரிக்க தூதுவரும் மேலும் 3 உயர்ஸ்தானிகராலய அலுவலர்களும் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ரொக்கெட் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர்.

லிபியாவின் பெங்காலி நகரில் இடம் பெற்ற தாக்குதலிலேயே லிபியாவுக்காக அமெரிக்க உயர்ஸ்தானிகர் கிறிஸ்டோபர் ஸ்டீவென் உட்பட நால்வர் பலியாகியுள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பத்தை அனுபவித்த காலத்தை மறந்துவிடு. ஆனால் அது கற்பித்த பாடத்தை மறந்து விடாதே. -அப்துல் கலாம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# போருக்குப் பின்பான அவலத்தைத் தடுக்க வாரீர்

போருக்குப் பின்பான நிலைமைகள் மிகவும் மோசமாக அமைந்துள்ளதை உலக வரலாற்றில் இருந்து கற்றுக் கொள்ள முடியும்.

இந்த வரலாற்று நிஜங்களில் இருந்து ஈழத் தமிழ் இனம் தப்பித்துக் கொள்ளும் என்று கூறிவிட முடியாது எனினும், தப்பித்துக் கொள்வது குறித்தான ஏற்பாடுகளை செய்வது எங்கள் தார்மீகக் கடமை என்பதை நாம் எவரும் மறந்து விடலாகாது.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி முடிவுற்ற வன்னிப் போருக்குப் பின்பான வாழ்க்கையின் அனுபவங்கள் இன்னமும் எங்கள் ஆழ் மனங்களை அறுத்துக் கொண்டே இருக்கின்றன.

உயிரிழப்புகள், சொத்தழிவுகள், இருப்பிடங்களைத் தொலைத்துவிட்டு அனுபவிக்கின்ற வேதனைகள் என்ற மிகப்பெரியதொரு துன்ப சாகரத்தில் தமிழ் மக்கள் மூழ்கியிருக்கின்ற அதேவேளை,

நாம் எங்களை மறந்தவர்களாக-தமிழினத்தை திட்டமிட்டு விழுபாதைக்கு நடத்திச் செல்கின்றவர்களின் திட்டமிட்ட செயல்களால் தமிழினம் போருக்குப் பின்பான -மிகவும் மோசமான சூழ்நிலைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

போர் முடிவுற்ற சம நேரத்தில் கலாசார பிறழ்வுகள் குறித்த கோஷங்கள் எங்கள் மத்தியில் எல்லாத் திசைகளிலும் ஒலித்துக் கொண்டன.

கலாசார பிறழ்வுகள் குறைந்துவிட்டன அல்லது அதற்கு நாம் பழகிக்கொண்டோம் என்ற ஏதோவொரு வகைமைப்பாட்டில் அது தொடர்பிலான எச்சரிக்கைகள் குறைந்து விட்டன என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

கலாசார பிறழ்வுகள் பற்றிய பயம் ஓரளவு தணிந்த நிலையில் கோஷ்டி மோதல்கள், வாள் வெட்டுகள், தெருச் சண்டைகள் என்ற மிகப் பெரிய பயங்கரம் போர் முடிவுற்ற வட பகுதியில் தலையெடுத்துள்ளதை உணரும்போது நெஞ்சம் திணுக்குற்றுப்போகின்றது.

இளைஞர்கள் கோஷ்டி மோதல்களில் ஈடுபடுவார்களாக இருந்தால், நிலைமை மிகவும் பாரதூரமானதாக அமையும் என்பது மட்டுமன்றி, ஓர் இனம் அழிவுப் பாதையை நோக்கி விரைவாகச் செல்வதற்கும் அதுவே வழியமைக்கும்.

எனவே எங்கள் இளைஞர்கள் தமிழ் இனத்தின் இருப்பை-அதன் எதிர்கால வாழ்வைக் காப்பாற்ற முன்வரவேண்டும்.

அதேநேரம் பாதுகாப்பு பணியைச் செய்யும் பொலிஸார் தங்கள் கடமையை நேர்மையுடன் செய்வது அவசியமாகும்.

தனித்து பொலிஸ் அதிகாரியின் நேர்மை என்பதற்கு அப்பால் ஒட்டுமொத்த பொலிஸாரும் இலஞ்சமற்ற - பக்கசார்பற்ற - நேர்மையுடனான பணியைச் செய்யும்போதே மேற்கூறிய அபத்தங்கள் இடம்பெறுவதைத் தடுக்க முடியும்.

# ஆட்டோ சாரதிகள் தொடர்பில் புதிய நடை முறைகள் அமுலுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளில் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து மீற்றர் கருவியை இணைப்பதுடன் ஓட்டுநர்கள் சீருடைகள் அணிய வேண்டும் என்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அமைச்சரின் செயலகத்திற்கு நேற்றையதினம் மாவட்ட முச்சக்கர வண்டி சங்க உறுப்பினர்கள், ஓட்டுநர்கள் வருகைதந்து தமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், சேவையில் ஈடுபடும் வகையில் யாழ்.மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் சங்கங்கள் இடங்களைத் தெரிவு செய்யும் போது ஏனைய வாகனங்களினதும் மக்களினதும் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாதவகையிலும் மக்கள் பார்வைக்கு இலகுவானதாகவும் அமையப்பெற வேண்டும்.

அத்துடன் அந்தந்த கிளை மற்றும் மாவட்ட சங்கங்களில் சகல முச்சக்கர வண்டிகளினதும். அவற்றின் உரிமையாளர்களினதும் ஓட்டுநர்களினதும் விபரங்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.

மேலும் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து சகல முச்சக்கரவண்டி ஓட்டுநர்களும் சீருடை அணிய வேண்டும் என்றும் மீற்றர் திட்டம் நடைமுறைக்கு வரும் என்றும் சுட்டிக்காட்டியதுடன் இச் சட்டவிதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் ஒவ்வொருவரும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் ஒழுங்கு விதிகளை மீறி செயற்படுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் அதேவேளை சங்க நிர்வாகத்திற்கு உட்பட்டு எல்லோரும் செயற்படும் அதேவேளை புதிதாக உள்வாங்கப்படவுள்ள இணைப்பாளர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் முச்சக்கர வண்டிகள் தரிப்பிடத்திலிருந்து முதல் ஒரு கிலோ மீற்றருக்கு 70 ரூபாயும் மேலதிகமாக கிலோ மீற்றருக்கு தலா 40 ரூபாய் வீதமும் அறவிடப்படும் எனவும் இதன் போது தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் பெண் முச்சக்கரவண்டி ஓட்டுநர்களுக்கான தரிப்பிடங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. (எ-6)

# மாபெரும் சமையல் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை மையம் மக்களுக்கான ஆரோக்கியமான உணவுவகைகளை கண்டறிவதற்கு நூற்றுக்கும் மேற்பட்ட சமையல் வல்லுநர்களின் உதவியுடனான மாபெரும் சமையல் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அருகிலுள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி தினத்தில் நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரையிலான காலப்பகுதியில் பொது மக்கள் கலந்துகொண்டு உணவுவகைகளை சுவைத்து பார்க்கவும் சமையல் செய்முறைகளை அறிந்து கொள்ளவும் வெற்றியாளர்களைத் தெரிவு செய்யவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவுப் பிரிவு அறிவித்துள்ளது.

இப்போட்டியில் வெற்றிபெறும் சமையலாளர்களுக்கு 2 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாயிற்கும் அதிகமான பணப் பரிசுகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதுடன் ஒவ்வொரு நோய்களுக்கு ஏற்ற உணவு வகைகளையும் ஒவ்வொரு வயதினருக்கு ஏற்ற உணவுவகைகளையும் அறிந்து கொள்ளமுடியும். (அ-9)

# சத்திய தரிசனம்



பஞ்சபூதங்கள் அனைத்தும் மனிதனின் பிராண தத்துவங்கள். இந்தப் பிராணனே இல்லையெனில் வாழ்க்கையே இல்லை. இதில் வாயு என்கிற பிராண தத்துவம் எங்கும் வியாபித்து இருக்கிறது. உன்னுள், உன்னுடன், உன்னைச்சுற்றி, உனக்குமேல், உனக்குக் கீழ் என்று எல்லா இடத்திலும் பரவியிருக்கிறது.


உன்னைச்சுற்றியும்கூட அது இருக்கிறது. ஆனால் அது நம் கண்ணில் படுவதில்லை. கையால் பிடிக்கமுடியாது. பார்க்கமுடியவில்லை. கையால் பிடிக்கமுடியவில்லை என்பதால் அதனை இல்லை என்று மறுக்கமுடியுமா? இந்த வாயுவே சுவாசம். சுவாசம் போய்விட்டால் சவம்.சுவாசமே நமக்குச்சிவம். இந்த சுவாச ரூபத்தில்தான் இறைவன் மனிதர்களுக்கிடையே சஞ்சரித்து அனைவரையும் போஷித்து வருகிறார்.

# இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனத்தின் ஏற்பாட்டில் திருநெல்வேலி இராமநாதன் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சத்தியசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 16-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை இரத்ததான நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இரத்ததானம் வழங்க விரும்புவோர் இந்நிகழ்வில் வழங்க முடியும் என மேற்படி நிறுவனத்தின் தலைவர் வைத்திய கலாநிதி ஆ.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். (எ)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## திலகமிடுவது மிக அவசியமா?

திலகமிடுவது ஆன்மீக முன்னேற்றத்தின் சின்னம் என்பது பொதுக்கருத்து.

பரமேஸ்வரனின் நெற்றிக்கண்ணாக அமையும் பாகத்தில்தான் பொதுவாக பொட்டு வைக்கும் வழக்கம். குங்குமம், சந்தனம், திருநீறு என்பவை பொதுவாக திலகமிடப் பயன்படுத்துகின்றனர்.

இந்துமத விசுவாசத்தின் பாகமாக திலகமிடுவதைக்கருதி வருகின்றனர் என்றாலும் இது மத விசுவாசத்துடன் சம்பந்தப்பட்டதல்லாமலே ஒரு நபரில் நிச்சயமான செல்வாக்கு செலுத்தவல்லது.

மனித உடலின் ஐந்தாவது திறன்மையான நெற்றியின் மத்தியிலே பொட்டுவைப்பது வழக்கம். இந்த மையத்தில் பார்வையைப் பதியவைத்தே தன்வயப்படுத்தி மயங்கவைப்பது. இம்மையத்தில் குங்குமம் அணியும் போது சூரியனின் கதிர்களில் அடங்கியிருக்கும் மருத்துவக்குணங்களை உறிஞ்சி எடுத்து மூளைக்குள் செலுத்திவிடுகின்றது.

பிரம்மமுகூர்த்தத்தில் சந்தனமும் விடியற்காலை குங்குமமும் மாலைப்பொழுதில் திருநீறும் அணிவது நரம்பு உறுதிக்கும் நோய் நிவாரணத்துக்கும் உத்தமம் என்று சூரிய ஒளியையும் மனித உடலையும் சம்பந்தப்படுத்தி செய்யப்படும் ஆராய்ச்சிகள் வெளிப்படுத்தியுள்ளன.

சந்தனமும் விபூதியும் அணிய சில தனிப்பட்ட விதிமுறைகளும் பாரத கலாசாரம் நம்மைக் கற்பிக்கின்றது.

*நெற்றியில் ஓம் கேசவாயநமஃ*
*கழுத்தில் ஓம் புருஷோத்தமாயநமஃ*
*இதயத்தில் ஓம் வைகுண்டாய நமஃ*
*நாபியில் ஓம் நாராயண நமஃ*
*பின்புறம் ஓம் பத்மநாபாய நமஃ*
*இடதுபக்கம் ஓம் விஷ்ணவே நமஃ*
*வலதுபக்கம் ஓம் வாமநாய நமஃ*
*தலை உச்சியில் ஓம் ஹ்ரிஷிகேசாயநமகஃ*
*பின் கழுத்தில் ஓம் தாமோதராய நமஃ*

என்று நினைவிற்கொண்டு சந்தனம் அணியவேண்டும்.

திருநீறை காலையில் நீரில் குழைத்தும் நடுப்பகலில் சந்தனம் சேர்த்தும் அணியவேண்டும். மாலையில் உலர்ந்த திருநீறே அணியவும் என்று விதிமுறைகள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக மென்பந்தாட்டம்;
# அரியாலை சரஸ்வதி, வள்ளுவர் அணிகள் காலிறுதிக்கு தகுதி

(வேலணை)

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் மிகப்பிரமாண்டமாக நடத்தும் மென்பந்தாட்டப் போட்டியின் B குழுவிற்கான போட்டி மல்லாகம் ஆர்.டி.எஸ். மைதானத்தில் இடம்பெற்றது. இரண்டாம் நாள் போட்டிகளின் முதலாவது போட்டியாக சரஸ்வதி அணிக்கும் விக்ரோரி அணிக்குமிடையில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சரஸ்வதி 8 ஓவர்களில் 5 விக்கெட்டை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விக்ரோரி 7 விக்கெட்டை இழந்து 62 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதனால் 5 ஓட்டங்களால் சரஸ்வதி அணி வெற்றிபெற்றது.

இரண்டாவது போட்டி ஞானகலா அணிக்கும் வி.பி. அணிக்குமிடையில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானகலா 8 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 57 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வி.பி. 7விக்கெட்டை இழந்து 33 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதனால் 24 ஓட்டங்களால் ஞானகலா அணி வெற்றி பெற்றது.

மூன்றாவது போட்டியில் ஞானம்ஸ் அணிக்கும் கார்மேல் வோய்ஸ் அணிக்குமிடையில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் 8 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றன. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கார்மேல் வோய்ஸ் 8 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றதனால் போட்டி சுப்பர் ஓவருக்குள் தள்ளப்பட்டது. சுப்பர் ஓவரில் ஞானம்ஸ் அணி வெற்றி பெற்றது. நான்காவது போட்டி வள்ளுவர் அணிக்கும் பிரைட் அணிக்கும் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வள்ளுவர் 8 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பிரைட் 7 விக்கெட்டை இழந்து 39 ஓட்டங்களை பெற்றதனால் வள்ளுவர் அணி 43 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. ஐந்தாவது போட்டி சரஸ்வதி அணிக்கும் ஞானம்ஸ் அணிக்குமிடையில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் 8 ஓவர்களில் 6 விக்கெட்டை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சரஸ்வதி 6 விக்கெட்டை இழந்து 78 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தது.

ஆறாவது போட்டியில் வள்ளுவர் அணியும் ஞானகலா அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய வள்ளுவர் 8 ஓவர்களில் 6 விக்கெட்டை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றன. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஞானகலா 7 விக்கெட்டை இழந்து 35 ஓட்டங்களை பெற்றதனால் வள்ளுவர் அணி 29 ஓட்டங்களால் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றது.

# பாடசாலை அணிகளுக்கிடையேயான கரப்பந்தாட்டப் போட்டி

அகில இலங்கை ரீதியாக மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான



ஆண், பெண்களுக்கான கரம் போட்டிகள் எதிர்வரும் 15, 16,17 ஆம் திகதிகளில் கொழும்பு றோயல் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் வடமாகாணத்தைச் சேர்ந்த 15,19 வயதுப் பிரிவு அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி, வவுனியா வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி என்பன 15 வயதுப் பிரிவிலும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்பன 19 வயதுப் பிரிவு சார்பாகவும் கலந்து கொள்ளவுள்ளன.

பெண்கள் பிரிவில் வவுனியா அல் இக்பால் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி என்பன 15 வயதுப் பிரிவிலும் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை என்பன 19 வயதுப் பிரிவு சார்பிலும் கலந்து கொள்ளவுள்ளன.

# மன்னார் பிறீமியர் லீக் கிரிக்கெட்போட்டி;
# சென்.ஜோசப், இந்து முன்னணி வெற்றி

மன்னார் பெரிய கடை ஸ்டார் ஈகிள் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் 10 ஓவர்கள் கொண்டு நடத்தப்படும் மன்னார் பிறீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி அண்மையில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

மொத்தமாக 36 போட்டிகளைக் கொண்ட லீக் சுற்றின் நடைபெற்ற 7 ஆவது போட்டியானது சென். ஜோசப் அணிக்கும் கிளிநொச்சி அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோசப் அணியினர் 10 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் சென்.ஜோசப் அணி சார்பாக நிர்மல் 31 பந்துகளில் 48 ஓட்டங்களையும் மில்டன் 16 பந்துகளில் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் கிளிநொச்சி அணிசார்பாக சுதன் 2 விக்கெட்டுக்களையும் திலக்சன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி அணியினர் 10 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 79 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 23 ஓட்ட வித்தியாசத்தில் தோல்வியடைந்தனர். துடுப்பாட்டத்தில் குகன் 8 பந்துகளில் 18 ஓட்டங்களையும் சுதர்சன் 14 பந்துகளில் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சென். ஜோசப் அணி சார்பாக டானியேல் 3 விக்கெட்டுக்களையும் நிர்மல் 2 விக்கெட்டுக்களையும் கீர்த்தன் மற்றும் அருள் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

8 ஆவது போட்டியாது இந்து முன்னணி அணிக்கும் சென். விக்டரிஸ் அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்து முன்னணி அணியினர் 10 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்களை பெற்றனர். துடுப்பாட்டத்தில் இந்து முன்னணி அணிசார்பாக வசந்தன் 30 பந்துகளில் 5 ஆறு ஓட்டங்கள், 9 நான்கு ஓட்டங்கள் உள்ளடங்கலாக 80 ஓட்டத்தினையும் தர்சன் 23 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 11 நான்கு ஓட்டங்கள் உள்ளடங்கலாக 31 ஓட்டத்தினையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சென். விக்டரிஸ் அணிசார்பாக அஜித் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென். விக்டரிஸ் அணியினர் 10 ஓவர்களில் 101 ஓட்டத்தினை மாத்திரம் பெற்று 47 ஓட்ட வித்தியாசத்தில் தோல்வியடைந்தனர்.

துடுப்பாட்டத்தில் ஜொய்சன் 13 பந்துகளில் 31 ஓட்டத்தினையும் பிரதீப் 4 பந்துகளில் 13 ஓட்டத்தினையும் பெற்றனர். பந்து வீச்சில் தர்சன் மற்றும் கோபால் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

கிளிநொச்சியில் நடைபெற்றுவரும் முரளி நல்லிணக்க வெற்றிக்கிண்ண இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டித் தொடரில் கலந்து கொள்வதற்காக கிளிநொச்சிக்கு இலங்கையின் முன்னணி வீரர்களான மஹெல ஜயவர்த்தன, குமார் சங்கக்கார ஆகியோர் வருகை தந்திருந்தனர். அவர்களுடன் போட்டியில் பங்கேற்கும் வீரர்கள் இருப்பதை காணலாம்.

(படங்கள்:- மல்லாவிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் நேற்று அழுதனான் : யுவராஜ்



இந்திய கிரிக்கெட் அணி கடந்த ஆண்டு உலகக் கிண்ணத்தை வெல்ல முக்கிய காரண மாக இருந்து தொடர்நாயகன் விருதையும் பெற்ற வர் யுவராஜ் சிங்.

ஆனால் அதன்பின்பு உடல் நலக் குறை வால் பாதிக்கப்பட்ட யுவராஜ் சிங்கிற்கு மருத் துவ பரிசோதனையில் நுரையீரல் புற்றுநோய் இருப்பது தெரியவந்தது.

இதற்காக அமெரிக்காவில் சிகிச்சை பெற்ற அவர் குணமடைந்து நாடு திரும்பி னார். அதன்பின்பு மீண்டும் இந்திய அணி யில் இடம்பெறுவதற்காக கடும் பயிற்சியில் ஈடுபட்டு வந்தார்.

இந் நிலையில் நியூசிலாந்திற்கெதிரான 2ஆவது இருபது-20 போட்டி சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று இந்திய அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. கடந்த 10 மாதங்களுக்கு பின்பு சர்வதேச கிரிக்கெட் போட்டியில் கள மிறங்கிய யுவராஜ் சிங் 2 ஓவர்கள் வீசி 14 ஓட் டங்கள் கொடுத்தார்.

பந்துவீச்சின் மூலம் விக்கெட் எதுவும் எடுக்கவிட்டாலும் களத்தடுப்பில் ஒரு கேட்ச் பிடித்து ரசிகர்களை உற்சாகப்படுத்தினார். மேலும் ஒரு கேட்ச் பிடிக்க முயன்ற போதுகை யில் காயமடைந்து ஓய்வு எடுத்து கொண்டார்.

அதன்பின்பு துடுப்பெடுத்தாடிய யுவராஜ் சிங் 26 பந்துகளில் 2 சிக்ஸர், ஒரு பவுண்டரி அடித்த அவர். ரசிகர்களுக்கு வாண வேடிக்கை காட்டினார். ஆனால் வெற்றிக்காக திணறிய இந்திய அணிக்கு பவுண்டரி அடித்து உதவ முயன்ற யுவராஜ் சிங் 34 ஓட்டங்கள் எடுத்த நிலை யில் ஆட்டமிழந்தார்.

இந் நிலையில் கடந்த 10 மாதங்களுக்கு பின்பு மீண்டும் இந்திய அணிக்காக களத் தடுப்பில் ஈடுபட்ட போது, ஆடுகளத்தில் தனக்கு கண்ணீர் வந்துவிட்டதாக யுவராஜ் சிங் தெரி வித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நான் இந் திய அணிக்காக களத்தடுப்பில் ஈடுபட களத் தில் இறங்கிய முதல் ஓவரிலேயே எனது கண் களில் கண்ணீர் வந்துவிட்டது.

ஆனால் நான் எந்த கமெராவிலும் சிக்க வில்லை என்றும் இந்திய அணிக்காக மீண் டும் விளையாட நான் கடந்த வந்து பாதை களை நினைத்து மகிழ்ச்சியடைகிறேன் என வும் கூறியுள்ளார்.

மேலும் யுவராஜ் சிங் வழக்கம் போல நேற்றுமுன்தினம் 12ஆம் நம்பர் ரி-சேட்டை அணிந்து களமிறங்கினார். இது அவருக்கு அதிர்ஷ்டமான எண் என்று கூறப்படுகிறது என் பது குறிப்பிடத்தக்கது.

## டோனியின் தவறான முடிபே தோல்விக்குக் காரணம்-பிராங்ளின்

இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் சென் றுள்ள நியூசிலாந்து அணி இங்கு இருபது-20 போட்டிகளில் பங்கேற்றது. இதில் முதல் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.

இந்நிலையில் இரு அணிகளுக்கு இடை யிலான 2வது இருபது-20 போட்டி நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்றது. இதில் இந்திய அணி இரண்டாவதாக துடுப் பெடுத்தாடி ஒரு ஓட்டத்தில் அதிர்ச்சித் தோல் வியடைந்தது.

இந்நிலையில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணியின் அணித் தலைவர் மஹேந்திரசிங் டோனி பதற்றத்துடன் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. நியூசிலாந்து அணியினருக்கு அதிர்ச்சியளித்தாக நியூ சிலாந்து அணியின் சகலதுறை வீரர் ஜேம்ஸ் பிராங்ளின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், ஐ.பி.எல். தொடர்களில் விளையாடி பழக்கமுள்ள இந் திய அணி வீரர்களுக்கு சென்னை ஆடுகளத் தின் தன்மை நன்கு தெரியும்.

நேற்று முன்தினம் போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி யின் அணித்தலைவர் டோனி முதலில் களத் தடுப்பை தெரிவு செய்தது நியூசிலாந்து அணி யினருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. டோனி பதட்டத்துடன் தவறுதலாக முடிபு எடுத்திருக் கலாம் என்று நினைக்கிறேன்.

விராட் ஹோலியை ஆட்டமிழக்கச் செய்த பின்பு வெற்றிக்குத் தேவைப்படும் ரன் ரேட்டை அதிகரிக்க முடிபு செய்தோம். அதன் மூலம் அடுத்து வரும் துடுப்பாட்ட வீரர்களை அழுத்தத்திற்கு உட்படுத்தி விரைவில் ஆட் டமிழக்கத் திட்டமிட்டோம்.

இந்திய சுற்றுப்பயணம் எங்களுக்கு மிக வும் கடினமாக இருந்தது. டெஸ்ட் தொடரில் தோல்வியடைந்த எங்களுக்கு இருபது-20 தொடரை கைப்பற்றியது மகிழ்ச்சியளிக்கின் றது என்றும் இருபது-20 உலகக்கிண்ணத் தொடருக்கு முன்பாக இந்தியாவிற்கெதிரான போட்டியில் வெற்றி பெற்றது மகிழ்ச்சியளிக் கிறது எனவும் கூறியுள்ளார்.

## யாழில் பட்டதாரிப் ...

படுகின்றனர். தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத் தாட்சிப் பத்திரம், வதிவிட அத்தாட்சிப்பத்திரம் (கிராம உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக் கொண் டது), பல்கலைக்கழக பட்ட சான்றிதழ், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களாயின் அப் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டமைக்கான சான்றி தழ், மேலதிக தகைமைகள் தொடர்பான சான்றி தழ்கள். (எ)

## தீர்மானம் எடுக்க ...

கலந்து கொண்டனர்.

இதற்கமையாக, சில நிபந்தனைகளுடன் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளுடன் கட்சி தலைவர் ஹக்கீம் பேச்சு நடத்துவார் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-11)

## கூட்டமைப்பு உறுப் ...

மட்டக்களப்பைச் சேர்ந்த எம்.கிருஸ்ண பிள்ளை, பிரசன்னா இந்திரகுமார், பி.நடராசா ஆகியோரே இவர்கள் என அவர் கூறினார்.

நாம் தேர்தல்கள் ஆணையாளரிடம் முறைப் பாடு செய்துள்ளோம். தெரிவு செய்யப்பட்ட எமது உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கும்படி யும் அவரிடம் கேட்டுள்ளோம். தேர்தல் முடிபு வர்த்தமானியில் வெளியிடப்படும் வரை பாது காப்பு விடயத்தில் தேர்தல் ஆணையாளருக்கு அதி காரம் உண்டு என நாடாளுமன்ற உறுப் பினர் சுமந்திரன் கூறினார்.

மாகாண சபை அதிகாரத்தை கைப்பற்று வது தொடர்பாக கேட்டபோது, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பதிலை தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு எதிர்பார்த்திருப்பதாக அவர் கூறினார்.

தாம் அதிகாரத்தைக் கைப்பற்றினால் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஒரு சிங்கள வரை அமைச்சர் சபையில் சேர்த்துக் கொள் ளப் போவதாகவும் அவர் கூறினார். (எ-11)

## சீன உயர்மட்ட ...

பொருளாதார மற்றும் கொன்ஸூலர் விட யங்கள் தொடர்பாக 10 புரிந்துணர்வு ஒப்பந் தங்களில் அவர் கையெழுத்திடுவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

இவ்விஜயமானது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை இவ்விஜயம் ஸ்திரப் படுத்தும் என இலங்கைக்கான சீனத் தூது வர் ஜியாங்காவோ கூறினார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் டி.எம்.ஜயரட்ன, சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பாங்குவோ சந்திக்கவுள்ளார். (எ-11)

## மரண அறிவித்தல்

# முருகேசு காசிப்பிள்ளை



பூநகரி சித்தன்குறிச்சியைப் பிறப் பிடமாகவும், மன்னார் எழுத்தூரில் வசித்து வந்தவருமான முருகேசு காசிப் பிள்ளை சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-அன்னப்பிள்ளை தம்பதிகளின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-இளையபிள்ளை தம்பதியரின் மருமகனும் வள்ளிப்பிள் ளையின் அன்புக் கணவரும், குலசேக ரம் (இளைப்பாறிய ஆசிரிய ஆலோ சகர், யாழ். கல்வி வலயம்), புஸ்ப நாதன் (தபால் அத்தியட்சகர்- வவு னியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி), சகுந்தலாதேவி (மன்னார்), ரவீந்திரராசா (சுவிஸ்), துரைசிங்கம் (UK), கோமளாதேவி (பூநகரி), சித்திராதேவி (ஆசிரியர் பயிற்சி, வவுனியா கல்வி யியற் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ஆனந்தி (யாழ். மாநகர சபை சிறாப்பர்), பவானி, யோகராசா (இளைப்பாறிய ரெலிக்கொம் ஊழியர்- மன்னார்), நற்குணவதி (சுவிஸ்), வளர்மதி (UK), சந்திரகுமார் (பரந்தன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் வாசுகி (ஆசிரியை, மன்/தாழ்வுப்பாடு றோ.க.), லோகனா (கனடா), தசீலன் (பிரான்ஸ்), கஜிந்தா (மன். சித்திவிநாயகர் வித்.), மதுரகன் (நிலஅளவையியல் விஞ்ஞான மாண வன், சப்ரகமுவ), குலமகள் (இந்து மகளிர் கல்லூரி), திபாகரி (சன்மார்க்க ம.வி), டிசாந் (சென். ஜோன்ஸ்), அருண் (சென்.ஜோன்ஸ்), கஸ்தூரி (பொஸ்கோ வித்.), தீபிகா (சுவிஸ்), அபிநயன் (சுவிஸ்), சகானன் (UK), மோகனன் (UK), பிரதாப் (மன்/ எழுத்தூர் றோ.க), சோபியா (மன்/எழுத்தூர் றோ.க), கேதாரன் (செல்வநகர் நேசறி), ஜெயகுமார், ஆனந்தன் ஆகியோரின் பேரனும் பிரதோஷின் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13.09.2012 இன்று வியாழக்கிழமை மாலை 3.00மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மன்னார் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 70, முதலாம் ஒழுங்கை,
எழுத்தூர், மன்னார்.

தகவல்: குடும்பத்தினர்

(414)

## வவுனியாவில் நேற்று ...

சர்வதேச கைதிகள் தினத்தையொட்டி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பிரார்த்தனையின் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், ஜனநாயக மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள், தென்னிலங்கையைச் சேர்ந்த முற்போக்கு சக்திகளின் பிரதிநிதிகள் ஆகியோருடன், காணா மல் போயுள்ளவர்களின் உறவினர்கள், விசார ணைகளின்றி சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் குடும்ப உறவினர் கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

காணாமல் போயுள்ளவர்களை கண்டு பிடித்துத் தரும்மாறும், சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யுமாறும் பல தடவைகள் அரசாங்கத் திடம் நேரடியாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரையிலும் சாதகமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவில்லை.

இதற்காகப் பல போராட்டங்கள் நடத்தப் பட்டுள்ள போதிலும் அதற்கும் அரசாங்கத் திடமிருந்து உரிய பதில் கிடைக்கவில்லை.

இந்த நிலையிலேயே 1008 தேங்காய் உடைத்து காளியம்மனிடம் பிரார்த்தனை செய்யும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டதாக இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித் தனர்.

சிறைச்சாலைகளில் விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை உடனடி யாக விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நிகழ்வில் உரையாற்றிய பலரும் வலியுறுத்தினர். இதன் பின்னர் 1008 தேங்காய்கள் உடைக் கப்பட்டன. சிறப்புப் பிரார்த்தனை வழிபாடும் நடைபெற்றன. (எ-6,11)

## காணாமல்போனோர் ...

தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு கள் விசாரணை செய்யப்படவுள்ளது.

இதற்கென கொழும்பிலிருந்து விசேட குழுவினர் எதிர்வரும் 17-ம் திகதி வருகை தர வுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் காணாமல் போன வர்கள் தொடர்பாக இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் காரியாலயத்தில் எதிர்வரும் 17-ம் திகதி தொடக் கம் 21-ம் திகதி வரை விசாரணைகள் இடம் பெறவுள்ளன.

இதில் யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப் பாய் ஆகிய பொலிஸ் நிலையங்களில் மேற் கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் 17-ம் திகதியும்,

கோப்பாய், சாவகச்சேரி, கொடிகாமம் பொலிஸ் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட முறைப் பாடுகள் தொடர்பில் 18-ம் திகதியும்,

19-ம் திகதி வல்வெட்டித்துறை, பருத் தித்துறை, நெல்லியடி பொலிஸ் நிலையங் களில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பிலும்,

20-ம் திகதி ஊர்காவற்றுறை, வட்டுக் கோட்டை, அச்சுவேலி, தெல்லிப்பழை, இள வாலை ஆகிய பொலிஸ் நிலைய முறைப் பாடுகள் தொடர்பிலும் விசாரணைகள் மேற் கொள்ளப்படவுள்ளது.

மேலும் 2006-ம் ஆண்டு காலப் பகுதி யில் காணாமல் போனவர்கள் தொடர்பில் கடந்த ஏப்ரல் மாதமளவில் முறைப்பாட்டாளர் கள் அழைக்கப்பட்டு காணாமல் போனவர் களின் தற்போதைய நிலை தொடர்பில் தகவல் சேகரிக்கப்பட்டது.

அவ்வாறு, மனித உரிமை ஆணைக்குழு விற்கு சமுகமளித்தவர்களே எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதிவரை நடத்தப்பட வுள்ள விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டுள்ள னர் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Diploma in Hardware Engineering

75% கட்டணக்கழிவில் புதிய பிரிவுகள் ஆரம்பம்

தமிழ் மொழி விளக்கங்களுடாக முற்றிலும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடியது



ஒரு கணினியை அசம்பிள் செய்து கொள்வதற்கு மற்றும் கணினியில் ஏற்படும் பிழைகளை திருத்திக்கொள்வதற்கு ஏற்றவகையில் பயிற்சியளிக்கப்படுகின்றது. இது நமது கணினிகளை நாமே சேவிஸ் செய்து பராமரித்துக் கொள்வதற்கும், சுயதொழில் வாய்ப்பினை உருவாக்கிக் கொள்வதற்குமான கற்கை நெறியாகும்.

- 100% Practical Training
- Free Software CDs

Micro processor, HDD ,FDD All Type of cards, CD Rom, Mother boards, Installation of O/S (windows7,XP/ Linux) & Software, Assembling, Upgrading, Configuring ,Troubleshooting, Repairing,Printers, Networking, Network essentials,User Level Networking.

DMI COMPUTER EDUCATION

DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
| --- | --- | --- | --- |
| No.113. கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403 | M.M.V வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0243 | கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Jet மோட்டோஸ் சந்தி Tel.:021-224 1970 |


# கொழும்பு நீதிபதி திடீர் பணிநீக்கம்

கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி அரவிந்த பெரேரா, நீதிமன்ற சேவை ஆணைக்குழு சபையின் தீர்மானத்தின்படி உடன் அமுலுக்குவரும் வகையில் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நீதிபதி தொடர்பில் நீதிமன்ற சேவை ஆணைக்குழு சபைக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடு ஒன்றை பரிசீலித்து பார்த்ததன் பின்னர் இத்தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி அரவிந்த பெரேரா குறித்து அண்மையில் பல ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# அரசாங்கத்துடன் பேச விருப்பம் ...

இவ்விடயம் தொடர்பாக மூன்று யோசனைகள் முன்வைக்கப்பட்டதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கூறினார்.

இது குறித்து அரசாங்கத்துடன் கலந்துரையாட வேண்டும் என பெரும்பாலானோர் விரும்பினர்.

வேறு சிலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கலந்துரையாட வேண்டும் என விரும்பினர். மேலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆகியவற்றைக் கொண்ட கூட்டணி அமைக்கப்படவேண்டும் எனக் கூறினர். இது ஒரு சுவாரஸ்யமான யோசனை என அவர் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாங்கள் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்போம். எவரையும் பகைக்காமல் இவ்விடயத்தை அணுக விரும்புகின்றோம். சில விட்டுக் கொடுப்புகளுக்கும் நாம் தயார். சமூகத்தின் கரிசனைக்குரிய பல விடயங்கள் அவற்றுக்கு நாம் முன்னுரிமை அளிக்கின்றோம் என அவர் கூறினார். (எ-11)

ஐரோப்பிய நாடான சைப்பிரஸிற்கு Student Visa

G.C.E(O/L) மட்டும் போதுமானது
IELTS தேவையில்லை

மாதாந்தம் 1 இலட்சம் ரூபாய் வரை சம்பளம் தரக் கூடிய பகுதிநேர வேலைவாய்ப்புக்கான ஆலோசனை

விரைந்து வாருங்கள்

புதன் கிழமைகளில் விடுமுறை

(C-1038)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் (PV82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016



தொலைபேசியூடாக வியாபார விசாரணைகள் இடம் பெறமாட்டாது.

DMI- ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L - 2014
பௌதிகவியல் - N. பாபு

- பிரிவு - I - சனி, ஞாயிறு - 10 am
- பிரிவு - II - சனி, ஞாயிறு - 12.00

- விரும்பிய நேரத்தைத் தெரிவு செய்யலாம்.
- தனிப்பட்ட அனுமதி உண்டு.
- புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(412)

# மரண அறிவித்தல்

## கருணானந்தம் ரங்கநாதன்

(யாழ்.மாவட்ட செயலக சாரதி)



39/9, கச்சேரி நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கருணானந்தம் ரங்கநாதன் அவர்கள் 12.09.2012 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கருணானந்தம் புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், மாலினியின் அன்புக் கணவரும் நிருஜன் (யாழ்.மாவட்ட உலர் உணவுப் பகுதி), நிருஜா, நிசாந்தன் (பிரான்ஸ்), நிதர்சன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஜீவனின், மாமனும் கஜனிகாவின் பேரனும் ஆவார்.

பரஞ்சோதி(பிரான்ஸ்), ரவீந்திரன்(பிரான்ஸ்), தர்சினி (கனடா), தர்மினி(நல்லூர் பிரதேச செயலக பட்டதாரி பயிலுநர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும்,

தனேஸ்வரி, சயந்தினி(பிரான்ஸ்), சிவநேசநாதன் (கனடா), றஜீவன்(கலாசார உத்தியோகத்தர் கரைச்சி), விநோதினி, சாந்தினி ஆகியோரின் மைத்துனனும்,

பிருந்தினியின் சித்தப்பாவும் கௌதம், அபிசாந், சுவேத்தா (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியப்பாவும், திரிஷா, சானியா (கனடா) அபிநயா, ஹர்ஷணன் ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.09.2012 வியாழக்கிழமை (இன்று) பி.ப.4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


36/9,கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தகவல்: குடும்பத்தினர்

(408)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் சோமசுந்தரம்

(இலங்கை சீமெந்து கூட்டுத்தாபன கற்குழி(குவாரி) பகுதி முன்னாள் ஊழியர்-காங்கேசன்துறை)



காரைநகர் புதுறோட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடாகவும் கொண்ட சுப்பிரமணியம் சோமசுந்தரம் நேற்று(12.09.2012) புதன்கிழமை மாலை நான்கு மணியளவில்இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும்,

பூமணிதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கம், பூரணம், செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரோஜாதேவி, இராஜேந்திரன்(சந்திரன்-லண்டன்), சாவித்திரிதேவி(சாரதா-லண்டன்), இராஜசுந்தரம்(நடனம்-லண்டன்), சாரதாதேவி(ராணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருநாவுக்கரசு(திரு வீடியோ அன் போட்டோ),புஸ்பராணி(ராணி-லண்டன்), ஞானசேகரம்(லண்டன்), பிரியதர்சினி(பிரியா-லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,

அரவிந்தன்(லண்டன்), அருட்செல்வன்(தயா), அருட்குமார்(கண்ணம்மா), புஸ் பராணி, சஜிந்தன்(லண்டன்), சாரா(லண்டன்), திவாகர்(லண்டன்), அபிநயா (லண்டன்)பிரியங்கா(லண்டன்)மிதுலா, அபிநாத் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2012) வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

புதுறோட், காரைநகர்.

அ.திருநாவுக்கரசு (திரு வீடியோ போட்டோ-இலங்கை),
எஸ்.இராஜேந்திரன் (சந்திரன்-லண்டன்)
00442089654223, 00447440026826

(413)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.